திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.



தலையங்கம்

மாலை 17. 13—1—64 மலர் 24

ஒளி வீசட்டும்!

——[0]——

மக்களது வாழ்வில், கடந்துசெல்லும் ஒவ்வொரு நாளும் அவர்களது வாழ்வின் பழைய சம்பவங்களைச் சுட்டிக்காட்டி அதற்கேற்ப வாழ்க்கையை ஒழுங்குற நடத்தவேண்டும் என்று வழிகாட்டுவது போல, சென்ற ஆண்டு நடைபெற்ற சில குறிப்பிடத்தக்க சம்பவங்கள், இந்த ஆண்டு பொங்கல் திருநாளில் நாடாள்வோருக்கு படிப்பினையாக அமைந்திருக்கின்றன.

குறிப்பாக—மக்களின் உயிர்நாடிப் பிரச்சினையான மொழிச் சிக்கலில் ஆட்சிபீடத்தினர் தங்களது மனசாட்சியை மிருகத்தனமான ஆதிக்க வெறிக்கு அடிமைப்படுத்தி விட்டு இந்தி பேசாத மக்களுக்கு இழைத்துவரும் அநீதிகளும் அந்த அநீதிகளைத் தகர்த்தெறிந்து மொழி உரிமையைக் காத்திட திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்ட அறப்போரரட்டமும் நாடு அறிந்ததாகும்.

மொழிச்சிக்கலில் இந்திய அரசினர் நியாயத்தை உணர்ந்து நடக்காத வரையில், நாட்டின் பொதுவான ஒற்றுமையை சீர்குலையச் செய்கிறார்கள் என்ற அசைக்கமுடியாத குற்றச்சாட்டுக்குத் தங்களைத் தாங்களே ஆளாக்கிக் கொள்கிறார்கள் என்பதை, கடந்துசென்ற நிகழ்ச்சிகள் அறிவுறுத்துகின்றன. அந்த அறிவுரையை ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர் இனியாகிலும் உணர்ந்து நடக்கவேண்டும்.

நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள மொழி உரிமையைக் காத்திட அறப்போரில் ஈடுபட்டு, சிறைத்தண்டனை பெற்று கடும் தொல்லைகளுக்காளாகியிருக்கும் நமது அண்ணா அவர்களுக்கும், கழக முன்னணித் தோழர்களுக்கும் நூற்றுக்கணக்கான செயல் வீரர்களுக்கும் நமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது தூய்மையான கடமை உணர்ச்சி, இந்தி ஆதிக்க வெறியை அறவே வீழ்த்தும் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் தமிழர் திருநாளில் கொள்வோமாக.

அடுத்தபடியாக, காங்கிரஸ் ஆட்சியில் ஏழை நடுத்தர மக்களின் வாழ்விலே வளம் பெருகாவிட்டாலும் இருந்துவரும் எஞ்சியுள்ள வாழ்வுக்காகிலும் பாதுகாப்புத் தரப்படுகின்றதா என்றால், பேச்சளவில் பாதுகாப்பும் செயல்முறையில் அதற்கு நேர்மாறான நடவடிக்கைகளுமே மலிந்துள்ளன, சோசலிஸ பாணியை நடைமுறைக்குக் கொண்டுவருவோம் என்று ஆவடி காங்கிரசில் முழக்கமிட்டனர். ஆனால் ஆவடியிலிருந்து புவனேசுவரம் வரை காங்கிரஸ் பவனி வருவது படாடோபப்படுத்தப்பட்டு வந்திருக்கிறதே யன்றி மக்களது வாழ்வில் சோஷலிஸ பாணி வாடைகூட வீசவில்லை.

ஆக ஆவடி காங்கிரசில் குரல் எழுப்பப்பட்ட சோஷலிஸ பாணி, என்பது வெறும் காட்டுக் கூச்சலேயன்றி அதை மனதார உணர்ந்து நிறைவேற்றும் மனவளத்தை காங்கிரஸ் கட்சியும், ஆளவந்தார்களும் பெற்றார்களில்லை யென்பது வெளிப்படை. இந்நிலையில் மீண்டும் புவனேசுவரத்தில் மதிப்பிற்குரிய காமராசர் தலைமையில் சோஷலிஸ பாணி மூட்டையைத் தூக்கிவைத்து பொம்மலாட்டம் நடத்த காங்கிரஸ் சூத்ரதாரிகள் மிகத் துணிவாக முன்வந்துள்ளனர்.

சோஷலிஸ முறை அடிப்படையில் மக்களின் வாழ்க்கையை மாற்றி அமைக்கவேண்டும் என்ற எண்ணம் ஆளவந்தாருக்கு உண்மையிலேயே இருக்குமானால் மக்களது உரிமைகளைச் சாகடிக்க எதேச்சாதிகாரமான முறையில் சட்டங்களைக் கொண்டு வருவதற்கு உள்ள துணிவு, மக்களின் வாழ்வைப் பறித்துக் கொழுத்துவரும் பிற்போக்குச் சக்தியை அடக்கி ஒடுக்கும் வகையில் சட்டங்களைக் கொண்டுவரத் தயங்குவானேன்?

அதுமட்டுமா—சோஷலிஸ பாணியை அமைக்க அரும்பாடு படுகிறோம் என்று ஓயாமல் கூப்பாடு போடும் காங்கிரஸ் ஆட்சியினர் கொண்டுவரும் சட்டங்கள் ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வை பகிரங்கமாகச் சீர்குலையச் செய்துவரும் ஆதிக்க வெறியர்

(23-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் சுவைக்குமா;
பூதான் மணக்குமா?

——(0)——

ஆடிக்காற்றிலும் அணையாது காக்கப்படும் அகல் விளக்குப் போல இன்னல்கள் பல வந்துற்ற போதும் இடைவிடாது பணியாற்றிடும் பெருமை "திராவிடன்" கிழமை இதழுக்கு உண்டு.

பல்லாண்டு காலமாகக் கழகப் பாசறையில் ஓர் படைக்கலமாகத் திகழும் இந்த நல்லேடு பொங்கல் சிறப்பிதழ் மூலம், வீறுகொண்ட தமிழர்தம் எழுச்சிக்கு மேலும் ஊக்கமூட்டும் அருஞ் செயலைப் புரிய முன் வந்துள்ளது என்றே நான் கூறுவேன்.

மிக்க நெருக்கடியான கட்டத்திலே தமிழ் இனம் மொழிப்போரிலே ஈடுபட்டிருக்கிறது.

மொழி காக்க அறக்கோட்டம் புகுந்து அடக்கு முறைக் கணைகளுக்கு நெஞ்சு காட்டிக் கொண்டிருக்கும் வீர மறவர்களைக் காணுகிறோம்.

பொங்கலன்று அவர்தம் இல்லங்களில்............ வெல்லம் கசக்கும்!

பெற்ற பிள்ளை சிறையிலன்றோ!

உற்ற கொழுநன் கொட்டடியிலன்றோ!

வளர்த்த தந்தை மொழி வளர்க்கக் களம் புகுந்தாரன்றோ!

அவர் வீட்டில் அவர் இல்லாது வெல்லம் இனிக்குமா?

பொங்கல் சுவைக்குமா?

பூதான் மணக்குமா?

கரும்பின் தேன் இனிக்குமா?

பொங்கல் விழாக் கொண்டாடும் தமிழர்கள், அந்த வீரர்களை எண்ணிக் கொள்ளுங்கள். அவர்தம் வீடுகளை மறந்துவிடாதீர்!

அவர்களுக்குப் பொங்கல் வாழ்த்தோடு அன்பு பொங்கிடும் வணக்கங்களையும் தெரிவிப்போம்!

கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.

○

"நான் கைது செய்யப்பட்டால், அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படும் இரத்த ஆறுகள் என்னைக் கலங்க வைக்காது. ஆனால் மக்கள், எனக்காக-என் பேரால் அதே முறையைக் கையாண்டால் அது என் மனதை நோகச் செய்துவிடும். நான் கைது செய்யப்பட்டதும் மக்கள் தங்கள் மன நிலையை இழந்துவிட்டால் அது எனக்குப் பெருத்த அவமானமாக இருக்கும்."

—இத்தகைய அரிய வார்த்தைகளைத் தன்னுடைய அறிவுரையாகத் தந்தவர், உலகம் போற்றும் உத்தமர், அறவழியில் பல அறப்போர்களை நடாத்தி வெற்றி கண்ட வித்தகர் காந்தியடிகள் ஆவார்.

கிளர்ச்சிகளைத் தொடர்ந்து ஏற்படும் அமளிகளை காந்தியார் விரும்பியது கிடையாது.

தாம் கைது செய்யப்பட்டதும் மக்கள் மன அமைதியை இழந்துவிடாமல் அமைதி காத்திடல் வேண்டும் என்பது அவரது விருப்பம்!

அரசாங்கத்தார் மூர்க்கத்தனமாக நடத்தும்போதுகூட, மக்கள் அமைதியாக இருக்கவேண்டும் என்பது அவரது கொள்கை!

சிலபல இலட்சியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் அந்த இலட்சியங்கள் ஈடேறத் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்ள வேண்டுமேயல்லாது, பிறருக்குத் தொல்லை கொடுத்தல் கூடாது என்பது காந்தியாரின் திட்டவட்டமான கொள்கை!

காந்தியாரின் அந்த அறவழியைப் பின்பற்றி, எத்தகைய கிளர்ச்சிகளைத் தாம் தமிழகத்திலே நடத்தினுலும், அதிலே சிறிதும் வன்முறை தலைகாட்டக் கூடாது என்ற ஒரு எண்ணம் கொண்ட தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள்தான்!

அவர் காந்தியாரையும் ஒரு படி தாண்டிச் சென்று,

"நான் கைதாகும் நாளை நீங்களெல்லாம் நாட்டுக்கு ஒரு திருவிழாவாகக் கொண்டாட வேண்டும்"

என்று கூறினர்.

சட்ட எரிப்புப்போர் சம்மந்தமாக அவர் கைது செய்யப்பட்ட போது இவ்வாறு அவர் உள்ளம் உருகக் கூறினர்.

அவரைத் தென்னுட்டுக் காந்தி என்று நாம் அழைப்பதை—அன்போடு கூறி அகமகிழ்வதை சிலர் குறைகூறுகின்றனர்.



வழிவந்தவர்!

வழி நடப்போம்!

என்.வி.என். சோமு பி.ஏ.

அண்ணுதுரையைத் தென்னுட்டுக் காந்தி என்று அழைத்து காந்தியின் புகழைக் கெடுக்கிருர்கள், அதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரவேண்டும் — என்று வடஇந்தியப் பத்திரிகையொன்றில் ஒரு தோழர் கருத்துத் தெரிவித்துள்ளார். சட்டம் என்பதற்கு இருக்கும் மதிப்பை உணர்ந்து தெரிவிக்கப்பட்ட கருத்தாக அது விளங்கவில்லை.

"கோன் எவ்வழி குடிமக்கள் அவ்வழி" என்று பழமொழி ஒன்றுண்டு!

ஆட்சி பீடத்திலே இருப்போர் எதற்கெடுத்தாலும் சட்டங்களைத் தீட்டிக்கொண்டு, மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் யதேச்சாதிகாரமாக நடந்து வருவதைப் போலவே மக்களும் அவர்களது ஆசாபாபங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளும்

பிஸ்மார்க்கின் பாதையில்; இன்றைய தினம் காங்கிரஸ் சர்க்காரும் அதை ஆதரிப்போரும், கருத்துக்களுக்கும், விளக்கங்களுக்கும் மதிப்பளிக்காமல் சட்டத்தை மட்டும் நம்பியிருக்கும் பரிதாபகரமான போக்கைத் தழுவிக் கொண்டுள்ளனர்!

"அண்ணு தென்னுட்டுக் காந்தியா?"

—இந்தக் கேள்விக்குப் பதில் தேவையென்ருல், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட நேரத்தில், தென்னகத்தில் கொந்தளித்த உணர்ச்சிக் கடலைக் கட்டுப்படுத்த அண்ணுவை வானொலியில் அழைத்துப் பேசினர்களே அதை நினைவில் கொள்ள வேண்

பதுமைகளாக மாறி வருவதன் அடையாளம்தான் தென்னுட்டுக் காந்தி என்று அழைப்பதைத் தடை செய்யச் சொல்லும் கருத்துக்கள்!

"உலகின் இன்றைய பிரச்சினைகள் சொற்பொழிவுகளாலும் தீர்மானங்களாலும் முடிவாகப் போவதில்லை — இரத்தத்தாலும் இரும்பு ஆயுதங்களாலும்தான் அவை முடிவு கட்டப்படும்"— என்று ஆதிக்கக் குரல் கொடுத்த

டும் !

அண்ணா அவர்களை மாற்றுக் கட்சிக்காரர்கள் எப்படித் தூற்றிய போதும், காந்தியார் உருவச் சிலையைத் திறந்துவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட போது, தட்டாமல் அந்த அழைப்பை ஏற்று "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்ற அந்த மாணிக்க மனப்பான்மையை எண்ணிப் பார்க்க வேண்டும்!

எல்லைப்புறத்தில் அந்நியர்கள் தாக்கிய போது, தனது உயிர்க் கொள்கையையே ஒத்தி வைத்து ஒத்துழைப்புத் தந்த உயர்ந்த நோக்கைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

யாருடைய மனமும் புண்படாமல் பேசுகின்ற பெருந்தன்மையை கருத்தில் இருத்திப் பார்க்க வேண்டும்!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அரிய அரசியல் மந்திரங்களை வழங்கி அதை அணுவளவும் தவறாமல் கடைப்பிடிக்கும் கண்ணியத்தை எண்ணவேண்டும்.

அரசியல் நாகரிகம் என்றால் 'அவுன்ஸ்' என்ன விலை என்று கேட்டுக்கொண்டிருந்த தமிழகத்தின் நிலையை மாற்றி அரசியல் நாகரிகம் நிலவச்செய்த அவரது நேர்மையை நினைத்துப்பார்க்க வேண்டும்.

இவ்வளவு ஏன் ?

காந்தியாரை "அரை நிர்வாணப்பக்கிரி" என்று நையாண்டி செய்தபோது அவர் எப்படி பொறுமையின் பூஷணமாய்த் திகழ்ந்தாரோ...

அதைப்போலவே,

தென்னக மக்களையும், தி. மு. கழகத்தையும் பண்டிதர் நேரு பலமுறை தரக்குறைவாகத் தாக்கியபோதெல்லாம் "மன்னிப்போம்! மறப்போம்" என்று பெருந்தன்மையோடு பேசினாரே அண்ணா, அதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒப்புவமை காட்டுவதென்றால், சிற்சில நேரங்களில் காந்தியாரையும் மிஞ்சும் அரிய திறமைகள் அவரிடம் உண்டு!

சென்னையில் மாணவர் கருத்தரங்கு ஒன்றில் பேசிய முஸ்லிம் லீக் பிரமுகர் அப்துஸ்சமத் அவர்கள்—இன்னும் சிலநாளில் காந்தியாரை "வடநாட்டு அண்ணா" என்று அழைக்கும் காலம் வந்தாலும் வரலாம்—என்று குறிப்பிட்டாரே, அதை மிகைப்பட்ட கருத்து என்று யாராலும் கூறமுடியாது!

காந்தியின் நிலைக்கு அண்ணாவை ஒப்புக்கொண்டால், தி. மு. கழகத்தின் புகழ் ஓங்கிவிடுமே என்ற அரசியல் வயிற்றெரிச்சலின் காரணமாகத்தான் அண்ணாவின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுகிறார்களே தவிர உண்மை நிலை என்ன ?

பேராசிரியர் கல்கி, அண்ணாவை தென்னாட்டு பெர்னார்ட்ஷா என்றார்!

காந்தியடிகளை அண்ணல் என்று அழைத்த தமிழ்ப்பெரியார் திரு. வி. க, அண்ணா அவர்களையும் தமிழ்நாட்டின் அண்ணல் என்று அழைத்தார்!

தமிழகத்தின் முதலமைச்சர் திரு, பக்தவத்சலம் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆயிரமாயிரம் இளைஞர்கள் உண்டு என்றார்!

இவ்வளவு பேரும் அவரது திறமையைத் தகுதியை ஒப்புக் கொண்டான பிறகு ஒரு சிலரின் வயிற்றெரிச்சலை நாம் பொருட்படுத்தக் கூடாது என்றாலும்—

நாம் அண்ணாவைத் தென்னாட்டுக் காந்தி என்று அழைப்பதில் உள்ள நியாயங்களை நிலைநாட்டவே இந்தக் கருத்துக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

அகிம்சை வழி வந்தவர் காந்தியார்!

அவர் வழிவந்தவர் அண்ணா!

வழிவந்தவரின் சொற்கேட்டு, அதன் வழி நடப்பதைத் தான் இன்றைய தென்னகம் தனது கடமையாக மட்டுமல்ல, விழைவாகவும் கொண்டுள்ளது என்பதை வயிற்றெரிச்சல்காரர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று இப்பொங்கல் நன்னாளில் எடுத்துக் காட்டுகிறோம்.

○

திராவிடன்

அடுத்த இதழ்

——(0)——

"திராவிடன்" அலுவலகத்துக்குப் பொங்கல் விடுமுறையை முன்னிட்டு, 18—1—64-ந் தேதிய இதழ் வெளிவராது. 25—1—64-ந் தேதியன்று 12 பக்கங்களில் 16 காசு விலையில 'திராவிடன்' வெளிவரும்.

-நிர்வாகி.

ஒப்புவர் மடையரப்பா!

○—∴—○

பார் புகழ் தமிழைக் காக்க
    கலை, நெறி, மானம், பண்பு
சீர்மிகு வீரம், ஈரம்
    செழுந்தமிழ் ஈகை, செம்மை
தார்மிகும் தனித்த தன்மை
    தனைவளர் இலக்கியங் கள்,
யார் நமக் கெதிரி யிங்கே
    யாம் இவை காக்க வந்தால்?

அடிமைகளல்ல நாம், நாம்
    அடங்கிடும் நிலையிலில்லை!
அடிமை களாக்கும் அற்ப
    ஆசையும் கொண்டதில்லை.
குடிமையின் குன்றம் நின்றே
    கதிரொளி பரப்பி வந்தோம்,
படிந்திட, பணிய மாட்டோம்
    பைந்தமிழ் காத்து நிற்போம்.

நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ., எம். பி.

"வாழ்ந்து நில், வாழ வைப்பாய்
    வையமுன் பக்கம் நிற்கும்!
தாழ்மனம் தவிர்க்க; தக்க
    தனிப் பெரும் உலகம் காண்பாய்!
சீழ் வுணர் வகற்று; சிந்தை
    செழுமையின் கோயிலாகும்!
வீழ்வர் காண் வினர், உன்னை
    வென்றவர் உலகில் இல்லை

ஒரு மொழி இந்தி யென்றால்
    ஒன்றே தான் ஆளுமென்றால்
ஒருமைக்கும் அதுவே யென்றால்
    ஒப்புவர் மடையர்! தப்பா
பெருமைக்கு வளமை கூட்டிச்
    செழுமைக்கு முழுமை ஈட்டும்
அருமை சேர் மொழிகள் ஒப்பா
    ஆண்டவர் நாங் களப்பா!

யார் எங்கோ கூடிப் பேசி
    யாத்திட்ட சட்டக் கத்தி
கூர்மையைக் காட்டும் போரில்
    கூட்டுவோம் தன்மானத்தை!
நேர்மையின் சந்நி தானம்
    நம்முடை பாடி வீடு
தீர்ப்பினை நோக்கி நிற்போம்
    தீவிரப் போரில் வெல்வோம்!

பிண்டாரிகளின் காலத்துக்குச் செல்லாதீர்!

டாக்டர். ஏ. லட்சுமணசாமி எம். எல். சி.

இந்தியாவை ஐக்கியமும், திருப்தியும், செழிப்பும் உள்ள ஒரு சமுதாயமாக சமைப்பதே இன்றைய தேவை. இவ்விஷயமாக நாடு சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. தேசத்தின் சக்திகளைத் திரட்டி இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே ஈடுபடுத்த வேண்டிய தருணம் இது. இச்சமயத்தில் நக்க பாகுபாடு செய்து பார்க்கக் கூடிய யாரும் இரண்டாந்தரமாகக் கருதக்கூடிய மொழிப் பிரச்சினையில் கவனம் திருப்பப்பட்டிருப்பதையும், கருத்து வேற்றுமைகளும் பூசல்களும் கிளம்பியிருப்பதையும் துர்ப்பாக்கியமென்றே கருதுவர். 'எல்லா மக்களும் ஒரே மொழியைப் பேசினால்தான் ஒரு நாட்டின் ஐக்கியம் வலிவுறும்' என்ற வாதம் சரித்திர உண்மைகளுக்குப் புறம்பானது. ஸ்விட்சர்லாந்து, கனடா, தென் ஆப்பிரிக்கா முதலிய பல நாடுகள் குறைந்த ஜனத்தொகை கொண்டவை எனினும் அவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுத்தப்பெறுகின்றன. நாற்பது கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு நாடு பல நூற்றுண்டுகளாகப் பன்மொழிகள் வழங்கிவந்த ஒரு நாடு—திடீரெனத் தனது அரசியல் அலுவல்களுக்கு ஒரே பொது மொழியை வைத்துக் கொள்ள முடிவு செய்ததாக இதுவரை நாம் கேட்டதில்லை.

குறிப்பிட்ட ஒரு மொழியை நாற்பத்தைந்து சதவிகிதத்தினர் பேசுவதாகக் கூறுவதால் அப்படிக் கூறுபவர்களின் கோரிக்கை உண்மையாகி விடாது. நாற்பத்தைந்தென்ன? ஐம்பது சதவிகிதத்தினர் கூட ஒரு மொழியைப் பேசலாம். இந்தியை பேசுபவர்கள் எத்தனை சதவிகிதம் இருப்பினும் அவர்களில் **எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின்** சதவிகிதம் என்ன என்பதே இப்பிரச்சினையின் முக்கியம். அவர்கள் இன்றும் சிறுபான்மையினரே.

நமக்கென ஒரு அரசியல் சாசனத்தை வகுத்துக்கொள்ளவேண்டும் என்று மக்கள் ஆர்வமாக இருந்த சமயத்தில்—சுதந்திரப் பெருக்கு என்ற புது வெள்ளம் நாட்டில் பல சக்திகளைப் பிறப்பித்திருந்தபோது—ஏதோ ஒரு குறிப்பிட்ட மொழியை நாட்டின் அரசாங்க மொழியாக உபயோகிக்க வேண்டும் என்ற சட்ட ஷரத்து நிறைவேற்றப்பட்டது. அதையெல்லாம் இங்கு விவரிப்பது அவசியமல்ல. என்றாலும் ஒன்றை மட்டும் நினைவு கொள்ளலாம். இந்த ஷரத்து நிறைவேற்றப்பட்ட போதுகூட காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் சபாநாயகர் ஸ்தானத்திலிருந்த அதன் தலைவரின் வோட்டு ஹிந்திக்குச் சாதகமாக அளிக்கப்பட்டதால் அந்த ஒரே வோட்டு வித்தியாசத்தில்தான் ஷரத்து காங்கிரஸ் கட்சியால் ஒப்புக் கொள்ளப்பட்டது எனத் தெரிகிறது.

ஒரு மொழி அந்நியம் என்றும், இன்னொரு மொழி சுதேசி என்றும் கூறுவது முழு உண்மையாகாது. அந்நியம், சுதேசி என்பது பல விஷயங்களைப் பொறுத்தது. இந்தி வழங்காத பகுதிகளில் பெரும்பாலோருக்கு இந்தியும் ஆங்கிலத்தைப்போலவே அந்நியம்தான். உணர்ச்சிகளை ஒரு பக்கம் வைப்போம். ஹிந்தி பேசாத மக்கள் தங்கள் தேசப்பற்றைக் காட்டிக் கொள்வதற்கு இந்திய மொழி ஒன்றைப் பிரமாணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அவ்வாறு இந்தியாவில் வழங்கப்படும் மொழியை அறிவதொன்றாலேயே தேசப் பற்றை நிர்ணயிக்க வேண்டுமானால் அஸ்ஸாமிய மொழி, வங்காளி, பஞ்சாபி. தென்னிந்திய மொழிகள் இவையும் இந்தி கோரும் அந்தஸ்து உரிமை கொண்டாடுவது நியாயமே! நிற்க. பிரச்சினையின் முக்கியமான அம்சம் இதுதான்; இந்தியா அறிவுப் பாதையில் சென்று எல்லாத் துறைகளிலும் செயலாற்றவும், தினந்தோறும் வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் தனது பங்கை நிறைவேற்றவும் எது தேவை? ஐக்கியத்தை உண்டாக்க ஒரு மொழி அவசியம் என்றெண்ணி அதனால் இந்த இதர வளர்ச்சிகளைப் புறக்கணிக்கலாமா? ஒரு நாட்டின் ஐக்கியத்தை மொழி ஒன்றாலேயே ஏற்படுத்தலாம் என்றோ, தேச ஐக்கியத்தில் மொழி ஒரு முக்கியமான அம்சம் என்றோ கூட எண்ணுவது தவறாகும். ஐரோப்பிய மொழிகள் பலவற்றுக்குப் பொதுவான சொற்களைக்கொண்டு தயாரித்த எஸ்பெராண்டோ மொழியைப் பரப்ப வேண்டுமெனக் கூறி வந்தவர்கள் வெற்றி அடையாததற்கு இதுவே காரணம். விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் கனவேகமாக முன்னேறி வரும் இன்று பின்தங்கிய நாடுகள் முன்னேறிய நாடுகளுக்குச் சமமாக வரவேண்டும் என்று துடிக்கின்றன. இம்முறையில் நாடு விரைவில் முன்னேற எது உதவும் என்று சிந்திப்பதுதான் தேசத்தின் தேவையாகும். 'இவர்கள் ஆங்கில மொழியே சாசுவதமாக இருக்கவேண்டும் என்று சொல்கிறார்களே!' என்று குறைப்படுவது சரியல்ல. நாடுவிரைவாக முன்னேறுவதற்காக வாய்ப்புக்களைப் பெறவேண்டும் என்றும் இதற்காக ஒரு மொழி நீடிக்க வேண்டும் என்றும் விரும்புகிறவர்கள் குறுகிய நோக்கமுள்ளவர்கள் என்றும், தீர்க்கதரிசனம் இல்லாதவர்கள் என்றும் கூறுவதால் ஒரு நன்மையும் ஏற்படாது. ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளுக்குப் பின் என்ன நிகழும் என்று நிகழ்காலத் தலைமுறையினரால் அறிய முடியாது. எனவே நாம் அத்தியாவசியங்களைக் கவனிப்போம். வீண் முழக்கங்களை விடுவோம்; நாட்டுப் பற்று என்பதைப்பற்றிய தவறான கருத்துக்களைக் கைவிடுவோம்; நாடு படிப்படியாக முன்னேற என்னசெய்யவேண்டுமோ அதை மட்டும் செய்வோம்.

இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது இந்தியாவானது பிண்டாரிகள் என்ற பிடாரிகளின் அநாகரிக காலத்துக்குச் செல்லாதிருக்க வேண்டுமானால் உயர் கல்விப் போதனை மொழியாக

ஆங்கிலம் இருப்பது எவ்வளவு உபயோகமானது என்று தெரியும். 'உபயோகமாக இருக்கும்' என்று கூறினால்மட்டும் போதாது. ஆங்கிலம்தான் அத்தியாவசியம் என்று சொல்லலாம். இன்றைக்கோ இனி வரப்போகிற பல்லாண்டுகளுக்கோ நாடு முன்னேறுவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு மொழியைக் கற்பதில் இந்தி பேசாத மக்கள் தங்கள் பொழுதைச் செலவிட முற்படுவது புத்திசாலித்தனமோ, சாமர்த்தியமோ ஆகாது. தென்னாட்டு மக்களின் உணர்ச்சிகளை ஆழப் புண்படுத்தும் முறையில் சில இந்தி ஆதரவாளர்கள் கண்டனம் செய்வது அநியாயமாகும்; அடிக்கடி பேசப்படும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இத்தகைய கண்டனங்கள் ஊறு விளைவிக்கும். இந்தி மொழி பேசும் எல்லாப் பகுதிக்காரர்களும் தங்களுக்குள் ஏதோ பெருத்த ஒருமைப்பாட்டுடன் இருப்பதாகவோ, மற்றப் பகுதியினரை விடத் தங்களுக்குள் அதிக அன்பை வளர்த்துக்கொண்டிருப்பதாகவோ, தேசப் பற்றில் சிறந்தவர்களாக விளங்குவதாகவோ எண்ண இடம் இல்லை.

பூகோள ரீதியில் தன்னிறைவு பெற்ற அங்கங்களாக இந்தியாவைப் பிரிப்பதற்குப் பதில் மொழிவாரி ராஜ்யங்கள் அமைத்தது ஹிமாலயத் தவறாகும். அதிகாரத்திலுள்ளவர்கள் விவேகத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இப்போதுள்ள குழப்பமும், தாறுமாறுகளும் ஒருபோதும் நிகழ்ந்திரா.

சர்வதேச சபைகளில் ஒரே சமயத்தில் எல்லா மொழிகளிலும் நடப்புக்களை அருமையாக மொழிபெயர்த்துத் தருகிற சாதனம் இருப்பதைக் கண்டு 1951-ம் ஆண்டில் நான் அப்போதைய லோக சபையின் நாயகராக இருந்த ஸ்ரீ. ஜி. வி. மாவ்லங்கர் அவர்களுக்கு இச்சாதனத்தை நாமும் பயன்படுத்திக்கொள்ளலாம் என யோசனை தெரிவித்து எழுதியிருந்தேன். இதனால் சபையின் நடப்புக்கள் எல்லோருக்கும் புரியும். இந்த உபகரணத்துக்குத் தேவைப்படும் செலவும் மிகக் குறைவாகவே இருந்தது. அதாவது நமது லோக சபைக்கு மூன்று லட்சம் ரூபாய் பிடித்திருக்கும். எனினும் மூன்று மாதங்களுக்குப் பின் எனக்கு ஸ்ரீ மாவ்லங்கர் எழுதினார்; **'இது நாட்டில் ஹிந்தியைப் பரப்ப உதவாதே!'** என்று. இன்றைக்கும் நாம் அன்று போலவே லோகசபையின் ஏராளமான அங்கத்தினர்கள் நடப்புக்களைப் பின்பற்ற முடியாமல் இருக்கும் காட்சியைக்கண்டுவருகிறோம். இவர்களெல்லாம் சபையின் ஆலோசனையில் பங்குகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறவர்கள்!

மொழிகள் விஷயத்தில் இன்னும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டியது இந்தியாவின் எதிர்காலத்துக்குப் பிராணாதாரமாகும் எனக் கருதுபவர்கள் நீங்கள் மனத்திலிருப்பதை ஐயம் திரிபற எடுத்துச்சொல்ல வேண்டும்.

மக்கள் எதில் ஈடுபாடுகொள்ள வேண்டுமோ அதில் அவர்களின் கவனம் செல்ல முடியாதபடி வேறு திசைகளில் அவர்களை வசியப்படுத்தித் திருப்புவதும், 'அந்நிய மொழி' என்று பெயர் சூட்டப்பட்ட ஒரு மொழியின் உபயோகத்தைக் கூறுபவர்கள் விதேசியத்தை வற்புறுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டுவதும் அர்த்தமற்ற காரியம்.

உலகமானது துரிதகாலத்தில் மாறி வருகிறது. அடுத்த சந்ததிக்குப் பின் எதிர்காலச் சூழல் எப்படி இருக்கும் என்றே யாரும் கூறமுடியாது. இச்சமயத்தில் கார்டினல் நியூமனின் இந்த வரிகளைத்தான் என்னால் மொழிய முடிகிறது:

அழைத்துச்செல் அன்பொளியே
சூழ்ந்திருக்கும் ஆழ் இருளில்
வீழ்ந்திருக்கும் அடியேனை
அழைத்துச்செல் முன்னேக்கி நீ!
எட்டாத காட்சிக்குக் கோட்டை
கட்டவில்லை;
ஓரடிசென்றாலும் அடியேனுக்கது
போதும்.

("கல்கி")

அண்ணா நாற்பது

—(நெல்லை இளம்மதி)—

உள்ளம் நினைத்தால் உறுதியுடன்
[வாய்சொல்லும்
வெல்லை மனத்தான் வினைமுடிப்பான—
[தள்ளிவிடும்
கைகளுக்குத் தன்கரத்தால் ஏற்றமிடும்
[நற்றலைவன்
வையகத்தில் அண்ணாவே தான்.

அன்னைமொழி காக்க அறப்போரில் ஈடுபட்டு
நன்னெறி போற்றி நலஞ்செய்வார்—கன்னல்
தமிழில் கலங்கரைபோல் தான்நிற்கும் நல்ல
தமிழ்த்துறையே அண்ணா தெளி.

இனம்வாழ தெற்கில் எழுந்த அறிஞர்
தனக்கென இல்லாத் தலைவன்—இனத்திற்கே
தன்னுழைப்பை ஆவியை தன்னுடலை தந்திடும்
இந்நாள் தலைவனண்ணா ஈங்கு.

அடுக்கு மொழியில் அழகாய் உரைக்கும்
மிடுக்குடை ஆற்றல் மறவன்—எடுத்தும்
தொடுத்தும் எழிற்பல கூட்டித் தமிழை
கொடுத்திடுவான் அண்ணா குழைத்து.

ஊற்றைப்போல் சொற்கள்தான் ஓடிவருமே;
[சொற்பெருக்கை
மாற்றார்கள் கேட்டால் மருள்வாரே—சாற்றில்
இனித்திடும் நற்சுவைபோல் இன்பம் அளிப்பார்
கனிவான அண்ணாதான் கண்டு.

பாடிவருந் தென்றல் பழகுதமிழ் காவலன்
நாடிவருந் தோழர்க்கு நண்பனும்—வாடிவிட்ட
தென்னவர்க்குத் தொண்டேதினம் செய்வான்
[புன்னகையில்
இன்முகத்னைதக் காட்டுமண்ணா ஈங்கு

ஏடெடுத்து அண்ணா எழுதினால் ஏடினிக்கும்
ஏட்டில் எழுத்தெல்லாம் தேன்பாய்ச்சும்
[—பாடாத்
தமிழ்கூடக் கைபட்டாற் பாடுமே தென்னர்க்கு
அமிழ்தேதான் அண்ணா அறி.

வாய்திறந்தால் பாமணக்கும் வன்சொல்
[அறியானே
காய்கவரான் நல்ல கனியிருக்க--பாய்ந்திடும்
தன்படையை வாய்ச்சொல்லின் தன்மையால்
[தான்நடத்தும்
தென்னவர்கோன் அண்ணா அறி

கன்னல் மொழியிருக்கும் கற்கண்டு பாகிருக்கும்
தின்னத் திகட்டாதந் தீந்தமிழ் கொண்டிருக்கும்
அள்ளக் குறையாத அன்பிருக்கும் எந்நாளும்
தள்ளானே அண்ணா தெரி.

தலைசாய்க்கும் அன்னனைத் தான்கண்டால்
[கல்லின்
சிலைபோல் நிற்பான் சிரித்து—கலைஞரும்
கற்றவரும் மற்றவரும் கண்டு களித்திருக்கும்
நற்றொண்டர் அண்ணா நினை.

திருவிட மக்கள் தெளிவிற் கறிஞர்
வருந்தொல்லை எல்லாம் வதைப்பார்—தருகின்ற
பொன்னெல்லாம் ஈடாமோ? பாரில் நிகரில்லா
தென்னர் தலைவனண்ணா தேர்.

பொய்சொல்லான் என்றும் புறங்கூறான்
[அன்புதனை
பெய்திடுவான் தெற்கில் பிறந்தவர்க்கே—
[தொய்வுகொள்ளான்
வேங்கையெனச்சீறி விரட்டிடுவான் தீமைகளை
பாங்குறவே அண்ணா புரி.

உத்தமர்தான் அன்னவர்க்கு ஒப்பாரும் மிக்காரும்
இத்தலத்தில் எங்கும் இலையே; நல்—வித்தகனும்
வாழ்ந்து வளங்கொழித்து வண்டமிழைத்
[தான்பருகி
வாழ்த்தநின்றார் அண்ணா விரிந்து.

வறியார்க்கு ஈந்திடும் வள்ளல்போல் கற்ற
அறிஞர்க்கு ஈவார் அறிவை—நெறியான
வாழ்க்கையை நித்தநித்தம் வாழ்ந்துநின்று
[என்றுமே
தாழ்வடையார் அண்ணா தெளி.

தீன்மையாய் இந்தித் திணிப்பைத்தடுத்து—
[தமிழைக்
கண்ணிற் கிமைபோலக் காத்திடுவான்—
[எண்ணியதை
என்றும் மறவாமல் இன்னுயிர்போல்
[காத்திடுவான்
பொன்னார் தலைவனண்ணா போந்து.

சோர்ந்த அரசியலில் சோர்ந்திடாமல் நீந்திவந்து
ஆர்த்த படைநடத்தி ஆங்குவென்றான்—
[சார்ந்துநின்ற
மக்களாட்சி தத்துவத்தை மான்புடன்
[சொல்லிவரும்
மக்கள் தலைவனண்ணா ஈங்கு.

நெஞ்சத்தால் ஒன்றாய் நெருங்கிவந்து
[என்தலைவன்
கொஞ்சமும் அஞ்சான் கொடுமைக்கு-வஞ்சகமாய்
வாட்டி வதைக்கும் வறுமைகளை வென்றுதான்
நாட்டிடுவான் அண்ணா நினைத்து.

அந்நாளில் மூவேந்தர் ஆண்டதுபோலண்ணாதான்
நன்னாளில் தாயகத்தை ஆண்டிடுவார்—இந்நாள்
திருவிடத்தை ஏற்காத் தலைவரெலாம் போற்ற
அருந்தலைவர் அண்ணா அறி.

இந்தி திணிப்பை எதிர்த்துச் சிறைசென்றார்
நந்தமிழர் வாழ்வை நலஞ்செய்தார்—பந்துபோல்
துள்ளிக் குதித்துத் துயர்துடைக்கும் நற்றலைவன்
கள்ளமிலா அண்ணாவே காண்.

திருவிடத்தின் தொண்டர் திரண்டிட்ட இந்நாள்
இருளிற் கலந்திடாமல் ஏற்றார்—அருந்தலைமை
பாரில் புதுமை பலசொல்லிப் பண்புகாத்தப்
பேரறிஞர் அண்ணா புரி.

ஆங்கிலமும் செந்தமிழும் ஆசையுடன்
[கேட்பதற்கு
பாங்குடனே நாம்சென்றால் பண்ணிசைப்பார்
[—ஈங்குதான்
ஈடில்லா நற்புகழ் ஏற்றுத் திகழ்கின்ற
நாடறிந்த அண்ணா நினை.

ஊக்குமுடன் சொல்லில்தான் ஊட்டிடுவான்
[நந்தமிழை
நீக்கிக் களைவான் நிறவெறியை—காக்கவே
வாஞ்சையுடன் தம்பிகளை வாரியணைக்கும்
[நற்றலைவன்
காஞ்சிதந்த அண்ணாவே காண்.

அஞ்சாமற்கொள்கை அடுக்கடுக்காய் வைக்கின்ற
நெஞ்சில் உறுதியுள்ள நீள்தலைவன்--கொஞ்சமும்
பின்வாங்கார் பேசுகின்ற கொள்கைதனில்
[என்றுமே
பொன்னார் மணியண்ணா புரி.

பகுத்தறிவு பாதையிலே பண்பட்டுக்
[கொள்கைதனை
வகுத்து நமக்களித்தார் நன்றாய்—தகுதியுள்ள
தென்னாட்டின் மாத்தலைவன் தன்மான
[நற்றலைவன்
இந்நாள் ஒருவரண்ணா காண்.

சாதி சமயத்தை சண்டையிடும் மூர்க்கராம்
வேதியரைத் தோற்கடித்து வெற்றிகண்டார்—
[ஓதிடுவார்
நல்லுறவை ஊட்டிடுவார் நல்லுணர்வை;
[தென்னாட்டின்
நல்வேந்தன் அண்ணா நினை.

தூற்றலைக் கண்டு துவளார் தொடர்ந்து
ஆற்றலைக் காண்பிப்பார் ஆர்வமுடன்—
[நாற்புறமும்
மங்காப் புகழ்பெற்று மாண்பை நிலைநாட்டும்
எங்கள் தலைவனண்ணா காண்.

கூத்தை இழித்தும் பழித்தும் குரைத்தபோது
கூத்தைக் கலையாக்கிக் காட்டினார்-சாத்திரத்தால்
வஞ்சித்த அன்னியரை வாதித்து வெற்றிகண்டார்
பிஞ்சுள்ளம் அண்ணா புரி.

தென்னாட்டு மக்களின் தீங்குகளை மாற்றிடவே
இந்நாளில் தோன்றிட்டார் காஞ்சியில்-விண்ணதிர
இக்கால நல்லறிஞர் ஏற்றிப் புகழ்ந்திடும்
தக்கதோர் அண்ணா புரி.

திருவிட மக்களின் தேவை உணர்ந்து
ஒருமகன் தென்னர் பரம்பரைக்கு—ஒருமுறை
தோன்றினான் காஞ்சியில் அன்னவன்
[தென்னாட்டின்
தேன்வார்க்கும் அண்ணா தெளி.

அறவழி நிற்பான் அருங்குணத்தைக்
[கொண்டோன்
மறவழி செல்வான் மருளான்—மறைதனை
ஓதிடுவான் மக்களுக்கு ஓங்கு புகழோன்தான்
தீதற்ற அண்ணா தெரி.

கட்டிக் கழகத்தைக் காத்துநிற்கும் நற்றலைவன்
எட்டிக்காய் தானே இழிகுலத்தார்க்(கு)—
[மட்டில்லா
செல்வம் தனைப்பெற்றுச் சீரோடு தான்விளங்கும்
நல்லோன்தான் அண்ணா நினை.

இனம்காக்க இந்நாள் எழுந்திட்ட மாத்தலைவன்
தனதுயிர் தந்திடுவான் தாய்க்கு—இனிதான
எண்ணம் பலகொண்ட உள்ளங் கவர்ந்தோன்நம்
அண்ணா எனநீ அறி.

தெள்ளு தமிழ்பாடும் தீந்தமிழ்ப் பாவலன்
அள்ளிவிட்டான் தென்னாட்டின் அன்பெலாம்—
[வெள்ளம்போல்
மக்கள் விரைந்து மதிப்பளிக்கும் பேரறிஞர்
இக்கால அண்ணாவே ஈங்கு

தீந்தமிழைக் காப்பதற்கு தீரமுடன் போராடும்
சாந்த குணமுடையோன் சர்க்காரின்—
[ஆந்தைமொழி
இந்தி அகற்றிவிட்டு எந்தமிழை ஏற்றிவைப்பான்
சொந்தமுடன் அண்ணா அறிந்து.

நேருக்கு நேராய்தான் நேர்மையுடன் வாதத்தை
பாரோர் அறியப் பகர்ந்திட்டார்—வேரோடு
வெட்டிக் கொணர்வார் வெற்றியினை இந்நாளில்
அட்டியின்றி அண்ணா அறி.

தீண்டப் படாதென்று தீங்கிழைத்த வேதியரை
பூண்டோடு ஒய்த்துப் புகழடைந்தார்—
[கண்ணியமாய்
தெற்கில் பிறந்தார்க்கு தீரமுடன் போராடும்
நற்றலைவன் அண்ணா நினை.

பண்டைப் பெருமைதனை பாரோர்
[அறியுவண்ணம்
கண்ணியமாய்ச் சொல்வார் கதைகதையாய்
[சண்டையிடும்
சாதி ஒழியப் பெரியாரைச் சார்ந்திட்டார்
நீதிகாக்கும் அண்ணா நினை.

பரந்தநல் நெற்றி பளிங்குபோற் கண்கள்
கறந்தபால் போலுள்ளம் என்றும் - நிரந்தரமாய்
நாட்டிற்குப் பாடுபடும் நல்லவனும் இன்றிந்த
நாட்டின் தலைவனண்ணா தான்.

இன்பத்தைக் கண்டு இதயம் பறிகொடார்
துன்பத்தைக் கண்டு துவண்டிடார்—என்றும்
எழிலார் திருவிடத்தின் தேவை உணர்த்தும்
[வல்லார்
களிகொள்ளும் அண்ணாவே தான்.

பெரியாரைப் பின்றொடர்ந்து பேராற்றல் பெற்று
நெறியான நீள்புகழ் கொண்டோன்—
[வெறிகொளார்
நாட்டு நிலைமைதனை நன்குணர்ந்து எங்களது
பாடல் தலைவனண்ணா புரி.

○

ஆரியமும் தீந்தமிழும்

அண்மையில் ஆப்கனிஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்கு வருகைதந்த அரசியல் பிரதிநிதிகள் ஆப்கனிஸ்தானத்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள பழந்தொடர்புச் சின்னம் பற்றி ஒரு புதுமை வாய்ந்த செய்தி தெரிவித்துள்ளார்கள். இதை நம் பத்திரிகைகள் நமக்குத் தெரிவித்துள்ளன.

ஆப்கனிஸ்தானஎல்லையிலுள்ள ஒரு வகைப் பழங்குடியினர் தமிழ் போன்ற ஒரு மொழியைப் பேசுகிருர்களாம்! கேட்பதற்கு ஒரு தமிழன் பேசினுல் தமிழரல்லாத ஒருவருக்கு எப்படி இருக்குமோ அப்படியே அம்மொழி இருக்கிறதாம்!

பத்திரிகைச் செய்தி இவ்வளவே!

அம்மொழியைப்பற்றிய வேறு தகவல்களும் அறிந்து அதனையும் தமிழ் அல்லது தமிழின மொழிகளையும் ஒப்பிட்டு அறிஞர் மேலும் விவரங்கள் தெரிவித்தால் தான அம்மொழி பற்றி நாம் எதுவும் தெரிந்துகொள்ள முடியும்.

இது இனி வருங்காலம் வழங்க வேண்டிய செய்தி.

ஆனுல் அதற்கிடையே தமிழினத்துக்கும் அத்தொலை நாட்டுக்கும் இடையே உள்ள சில தொடர்புகளைப்பற்றி இத்தமிழ்ப் பொங்கற் பருவத்தில் விளக்கம் தருவது பொருத்தமாயிருக்கும்.

தமிழ் என்ற சொல் திராவிடம் என்ற சொல்லிலிருந்து சிதைந்து வந்த திரிபு என்று சமஸ்கிருதவாணர் முன்னுல் கூறிக் கொள்வதுண்டு. அதற்கேற்ப இன்று ஆராய்ச்சி அறிஞர் தமிழ் மொழியை மட்டுமன்றி, அதனுடன் தொடர்புடைய வேறு மொழிகளையும் சேர்த்துத் தமிழ் மொழி இனத்தைக் குறிக்க இச்சொல்லை வழங்கிலுைம், சமஸ்கிருத மொழியில் அது தமிழ்மொழியைக் குறிக்கவே பெரிதும் வழங்கிவந்துள்ளது.

தமிழ்; திராவிடம் என்ற சொற்கள் தொடர்புடைய சொற்கள் என்பதில் ஐயமில்லை. ஒன்றிலிருந்து ஒன்று வந்திருக்கக் கூடும் என்று கருதுவதும் ஒலி நூல் முறைப்படி வருவதன்று. ஆனுல் தமிழ் என்ற சொல் 2000 ஆண்டு காலத்துக்கு முன்பிருந்தே வழங்கி வருகிறது. தொல்காப்பியத்திலேயே அச்சொல் வழங்குகிறது. ஆனல் திராவிடம் என்ற சொல் வழக்கோ மிகவும் பிற்காலத்தது. ஆகவே இரு சொற்களில் ஒன்று மற்றென்றிலிருந்து வந்தது என்ருல், திராவிடம் என்பதிலிருந்து தமிழ் வந்திருக்க முடியாது; தமிழ் என்பதிலிருந்து திராவிடம் வந்திருக்க முடியும்.

சமஸ்கிருதத்தில் தமிழைக் குறிக்கத் திராவிடம் என்ற சொல்லுக்கு முற்பட்டே திராமிளம், திரமிணம் என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. ஆகவே 'தமிழ்' என்ற மொழிப்பெயர்ச் சொல்தான் வடவர் வழக்கில் தமிள—த்ரமிள — த்ராமிள—த்ராவிட என்ற படிகளாகச் சிதைந்து மாறியிருக்க வேண்டும் என்பது இப்போது உறுதியாகத் தெரிகிறது.

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரையார்

தமிழ் மொழியின் பெயர் தமிழ்ச் சொல்தான். இனிமையுடைய மொழி என்ற பொருளுடன் தமிழர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன் தம் மொழியை அழைத்துள்ளனர்.

'தமிழ்' என்ற சொல் சமஸ்கிருதச் சொல் என்று சமஸ்கிருதவாணர் கருதினுர்கள். அது தவறென்று தெரிந்துவிட்டது. ஆனுல் 'ஆரியம்' ஆரியர், என்று சமஸ்கிருதத்துக்கு உரிய இனத்துக்கு எப்படி பெயர் வந்தது? இந்தக் கேள்வியை இப்போது தமிழர் எழுப்ப இடம் ஏற்பட்டுள்ளது. அதுவும் தமிழ்ச் சொல்தான் என்று கருதுவதற்குரிய சான்றுகள் உள்ளன.

சமஸ்கிருதவாணர் சமஸ்கிருத மொழியையும் அதன் பழம் பதிப்புக்களாகிய வேத மொழியையும் ஆரியம் என்று குறிப்பிட்டனர். அம்மொழிக்குரியவர்களாக அவர்கள் பிராமணர், க்ஷத்திரியர்; வைசியர் ஆகிய பூணூலிடும் உரிமையுடைய மூவரினத்தவரை மட்டும் ஆரியர் என்றும் குறித்தனர்.

இந்தியாவிலுள்ள சமஸ்கிருதவாணர் தங்களை ஆரியர் என்று குறிப்பிட்டது போலவே, பண்டைப் பாரசிக நாட்டிலுள்ளவர்களும் பழம் பாரசிக மொழியாளர்களும் தங்களை ஈரானியர் என்று கூறிக்கொண்டனர். 'ஆரிய' என்ற சொல்லும் 'ஈரானிய என்ற சொல்லும் தொடர்புடைய சொற்கள் என்று மேலை அறிஞர் கருதுகின்றனர்.

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகள் ஒரே இன மொழிகள் என்று ஆய்ந்து முடிவு செய்து, அதனைக் குறிக்க முதலில் தமிழினம் என்ற பெயரையும் பின்னர் திராவிட இனம் என்ற பெயரையும் கொடுத்தவர்கள் ஐரோப்பிய அறிஞர்களே. அதுபோலவே சமஸ்கிருதம் வட இந்தியாவிலுள்ள தாய்மொழிகளும், பாரசிக மொழியும், ஐரோப்பாவில் இலத்தினம் கிரேக்கம் முதலிய பண்டை மொழிகள் உட்பட ஆங்கிலம் பிரஞ்சு ஜெர்மன் ரஷ்யன் முதலிய பெரும்பாலான ஐரோப்பிய மொழிகளும் ஒரே இனம் சார்ந்தவை என்பதையும் அம்மேலை அறிஞரே ஆராய்ந்து கண்டு முடிவு செய்துள்ளனர். இப்பேரினத்துக்கு அவர்கள் முதலில் ஆரிய இனம் என்றும், பின்னுல் மூல ஆரிய இனம் (Ur Aryan) என்றும், இறுதியாக இந்தோ—ஐரோப்பிய இனம் என்றும் பெயரிட்டழைத்தார்கள்.

இந்தோ—ஐரோப்பிய இனத்தாருக்கு இப்போது ஆரிய இனம் என்ற பெயரை ஐரோப்பிய அறிஞர் வழங்குவதில்லை. இந்தோ—ஐரோப்பிய இனத்தின் கீழ்திசைக் கிளை அல்லது ஆசியக் கிளைக்கு மட்டும்தான் அப்பெயர் பொருந்தும் என்றும்; முழுப் பேரினத்தைக் குறிக்க அது பொருத்தமற்றதென்றும் அவர்கள் கருதுகின்ருர்கள்.

இதற்குக் காரணம் காட்டல் எளிது. பேரினத்தைச் சேர்ந்த மொழிகளில் மிகப் பெரும்பாலானவை ஐரோப்பாவிலேயே உள்ளன. ஆரிய அல்லது ஈரானிய என்ற சொல் அவர்கள் மொழியில் வழங்காத சொல் ஆகும். அதுமட்டுமல்ல, மொழியின் பல அடிப்படைச் சொற்களும் (சயஸ்கிருதம்-பிதா, மாதா தாய் தந்தை; ஆங்கிலம் பாதர்-மதர்; சமஸ்கிருதம்-த்வார்-கதவு; ஆங்கிலம் டோர்)தெய்வப் பெயர்களும் (சமஸ்கிருதம்-த்யௌஸ் பிதர் — இலத்தினம் — ஜூபிடர்; சமஸ்கிருதம் வருண—இலத்தீன் யூசுனஸ்) எல்லா மொழிகளுக்கும் பொதுவாகவே உள்ளன. ஆயினும் இந்தியாவிலும் பாரசிகத்திலும் உள்ள இந்தோ—ஐரோப்பிய இனத்தவர் மட்டுமே தமக்கென வேதங்கள் (சமஸ்கிருதத்தின் வேதம்; பாரசிகரின் அவெஸ்தா) தொகுத்துள்ளனர். இக்காரணங்களால் மேலைக் கிளையிலிருந்து வேறுபட்டத் தனிப் பொது தன்மைகள் கொண்ட கீழையினத்தை மட்டும் அவர்கள் ஆரியர் என்ற சொல்லால் குறித்தார்கள்.

'ஆரிய' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்று மட்டும் கேட்டதில்லை. கேட்டவர்களுக்கும் முதலில் எளிதாகச் சமஸ்கிருதத்திலும் பண்டைப் பாரசிக மொழியும் அதற்குக் கூறப்பட்ட பொருள் விடைஅளிக்கப்போதியதாகவே இருந்தது. தமிழர் 'தமிழ்' என்ற சொல்லுக்கு 'இனிமை' என்ற பொருள் சுட்டி வழங்கியிருப்பதுபோன்று சமஸ்கிருதம் பண்டைப் பாரசிகம் ஆகிய இரு மொழிகளிலுமே ஆரிய—ஈரானீய என்ற சொற்களுக்கு மேலானவன் (தமிழ் சான்ருேன், ஆன்ருேன்) என்ற பொருள் விளக்கம் கூறினர்.

மேலை ஆராய்ச்சியாளர் கீழை ஆராய்ச்சியாளர் ஆகிய இரு சாராரிலும் பெரும்பாலோர் இதற்குமேல் செல்லவில்லை. ஆயினும் ஒரு சிலர் மேற்சென்று 'மேலானவர்' என்ற பொருளுக்கு மூலமாக 'உழவர்'என்ற பொருள் உண்டு என்று கூறினர்.

இலத்தீன மொழியில் 'ஆரா' என்ருல் கலப்பை அல்லது ஏர் என்று பொருள். ஆரியன் என்றும் வினைச்சொல் உழுதல் என்றும் பொருள்படும். ஆகவே உழவர் என்ற சொல்லில் ஆரியன் என்ற சொல் முதலில் விளங்கி, உழவறிந்த உயர் நாகரிகத்தில் வாழ்ந்தவர் தம்மை உழுமினத்தவர் அல்லது மேலானவர் என்று கூறிக்கொண்டதாக விளக்கம் தந்தனர்.

இவ்விளக்கம் பொருத்தமானது என்று ஒத்துக்கொள்ளத்தக்கதே. தமிழில் வேளாண்மை, வேளாளர் என்ற சொற்கள் இதே வகையில் உழவர் என்ற பொருளும் விருந்திடுவோர், வீரர், அரசர், கடவுளை வழிபடுவோர் என்று படிப்படியான உயர் பொருள்கள் பெறுவதைக் காண்கிருேம்.

இலத்தினில் ஆரா என்ற சொல் போல, சமஸ்கிருதத்திலும் 'ஆராம்' என்ற சொல் கலப்பையைக் குறிக்கின்றது.

ஆனுல் பொருத்தம் இத்துடன் நின்றுவிடுகிறது. ஆழ்ந்து நோக்கினுல் இதில் சில சிக்கல்கள் தென்படுகின்றன. பண்டைய சமஸ்கிருதவாணர் மடங்களிலும், சமஸ்கிருதச் சார்பான ஏடுகள் எல்லாமே நோக்கினுல், ஒரு



சென்னைச் சிறையில் தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன்

செய்தி மிகத் தெளிவாகத் தெரிய வரும். உழவரை உயர்வாகக் கருதும் பண்பு தமிழினத்திலும் உலகின் பல்வேறு இனங்களிலும் அடிவேரோடிய பண்பு ஆகும். ஆனல் சமஸ்கிருத வாணரும் அவர்கள் வழிவந்த வைதிகரும் இன்றுவரை உழவையும் வாணிபத்தையும் கடைப்பட்ட தொழிலாகக் கருதுபவரேயாவர். தமிழில்கூடப் பிற்கால நூல்கள் 'வேளாளர்' என்ற மதிப்புக்குரிய புத்தமிழ்ச் சொல்லைச் சூத்திரர், அடிமைகள், தாசிதாச வகுப்பினர் என்ற பொருளில் வழங்கியதைக் காண்கிறோம்.

ஆரியர் என்ற சொல் மேலானவர் என்ற பொருள் மட்டுமின்றி, உழவர் என்றும் பொருள் கொள்ளும் என்று ஏற்றுக்கொண்டால், அதற்கு மூலமான கலப்பை என்ற சொல் (சமஸ்கிருதம் ஆரசம்—இலத்தீன்—ஆரா) உண்மையில் தமிழின் 'ஏர்' என்ற சொல்லின் திரிபு என்றே கூறத்தகும். ஏனெனில் கலப்பை என்ற இச்சொல் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் தென் இனங்களின் தொடர் மிக்க தென் கிளைகளில் மட்டுமே உள்ளன; இந்தோ — ஐரோப்பியர் நாடோடிகளாக ஆடுமாடு மேய்த்துக்கொண்ட நிலையிலேயே தென்னுலகுக்கு வந்தனர் என்பதும், தெற்கு ஐரோப்பா, தென் ஆசியாப்பகுதிகளுக்கு வந்து நெடுங் காலத்துக்குப் பின்னரே உழவும், வீடும், குடியும், ஊரும் நாடும் உடையவராயினர் என்பதும் வரலாறறிந்த செய்தி ஆகும்.

தமிழில் ஏர் என்ற சொல் கலப்பையையும் அழகையும் கலையையும் குறிக்கும். சால் உழுபடைவரை குறிக்கும். இந்த இரண்டின் திரிபுகளாக ஆர்—ஆல் என்ற பகுதிகளும் ஆன்ருேர், சான்ருேர் என்ற சொற்களும் தமிழில், பெருவழக்காகும். ஆனல் இவை மேலோர் என்று' வழங்கினரேயன்றி இனம் குறித்ததில்லை.

ஆரி எனத் தமிழகத்திலேயே குற்ருலத்தருகில் ஒருநாடு உண்டு —அது குறவர் நாடு. தலைவன் ஆரி என்றும், நாடு ஆரியநாடு என்றும் மக்கள் ஆரியர் என்றும் குற்ருலக் குறவஞ்சியில் கூறப்படுகிறது.

குறவர்மலை நட்டில் உழவு பெரிதும் நடைபெற முடியாது. ஆகவேதான் அம்மலையிடையே உழுநிலங்களையும் கொண்டிருந்த குற்ருலப்பகுதி மக்கள் தங்கள் நாட்டை ஆரியநாடு என்று பெருமையாகக் கூறிக்கொண்டனர்.

கன்னட நாட்டில் இது போலவே குடகு எல்லையில் மற்ருெரு திராவிட இனப் பகுதியினர் தம் நாட்டை ஆரிய நாடு என்று பெருமையுடன் கூறிக் கொண்டனர்.

தமிழர் வாழும் இடங்களில் பல குற்ருலங்கள், பாபநாசங்கள், பல மதுரைகள், திருநெல்வேலிகள் உண்டு என்பதைப் பலரும் அறிவர். நிலங்கடந்தும் கடல் கடந்தும், தமிழர் வாழும் இடங்களிலும் இதுபோல பல மதுரைகள், மலையங்கள், பாண்டிகள், பாஞ்சாலங்கள் உண்டு. இது போலவே பண்டைய நாட்களில் தமிழின நாகரிகம் பரவிய பல இடங்களிலும்—சிறப்பாக மலைப் பாங்கான நாடுகள் பல ஆரிய நாடுகள் இருந்தன.

இத்தகைய ஒரு ஆரிய நாடு சென்ற இரண்டாயிர ஆண்டுகளாகவே ஆப்கானிஸ்தான எல்லையில் இருந்து வருகிறது. ஆப்கானிஸ்தான் பிரதிநிதிகள் கூறிய செய்தி இதை நமக்கு நினைவுக்குக் கொண்டுவருகிறது.

இந்த 'ஆரிய நாடு' இன்று ஆப்கனிஸ்தானத்துக்கு வடக்கே ருஷ்யப் பெரும்பரப்பில் சோவியத் ருஷ்யாவின் ஒரு பகுதியாக உள்ளது. இதன் அருகே 'ஆரியக் கோசு' என்னும் இன்னொரு பகுதி உள்ளது. ஆரியக்கோசு என்ருல் சின்ன ஆரியம் என்பது தான் பொருள். கொச்சி என்ற கேரளத்து நாட்டில் இந்தோ சீனவிலுள்ள கொச்சின் சீனவிலும் தமிழில் கோசு என்ற கனி வகையின் பேரிலும் நாம் இதே சொல்லைக் காணலாம். மலையாளத்தில் கொச்சு என்ருல் சிறிது என்று பொருள் ஆகும்.

ஆரியா அரசோசியா என்ற இந்த இரண்டு பகுதிகளும் அசோகப் பேரரசன் ஆண்ட பேரரசில் அடங்கிய இரண்டு மாகாணங்களாயிருந்தன. அசோகன் பாட்டனை சந்திரகுப்தன் காலத்தில் சந்திரகுப்தன் செலியூக்கஸ் என்ற கிரேக்க அரசன் மகளைத் திருமணம் செய்து கொண்ட பொழுது செலியூக்கஸ் என்ற கிரேக்க அரசன் தன் மகளுக்குச் சீதனமாக ஆரியா, அரசோசியா என்ற இந்த இரு நாடுகளைச் சந்திரகுப்தனுக்கு அளித்தான்.

செலியூக்கஸ் கிரேக்கப் பேரரசன் அலக்சாண்டரின் படைத் தலைவனயிருந்து அவன் இறந்த தன் பின் அவன் பேரரசாட்சியின் கீழ் பகுதி கைக்கொண்டு ஆண்டவன் ஆவான். அலெக்சாண்டர் இந்தியாவுக்குள் நுழையுமுன்பே ஆரிய அரசோசாசியா என்ற இந்தப் பகுதிகளை வென்று, அதைத் தன் பேரரசின் பகுதியாக செலியூக்கஸுக்கு விட்டுச் சென்ருன்.

அலெக்சாண்டர் கி. மு. நான்காம் நூற்ருண்டில் வாழ்ந்தவன். அவன் காலத்துக்கு முன் ஆரியாவும் அரசோசியாவும் பாரசிகப் பேரரசர் ஆட்சியின் கீழ் இருந்தன

சிந்து ஆற்றுவெளியின் பெரும் பகுதி இன்று பாலைவனமாகியுள்ளது. பலுச்சிஸ்தானமும் அப்படியே. ஆப்கனிஸ்தான், நடு ஆசியா (ஆரியா அரசோசியாப் பகுதிகள்) பாரசிகம் அல்லது ஈரான் முதலிய பகுதிகளிலும் இன்று மழை மிகவும் குறைந்த அரைகுறைப் பாலைவனங்களே. ஆனல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இவை போதிய மழையும், இன்று வற்றிப் போய் விட்ட வளமான பல பேராறுகளும் உயர்ந்த நாகரிக வளமிக்க மக்கள் இனப்பற்றும் நிறைந்த பகுதியாய் விளங்கின என்பதை வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது.

ஆரியர் என்று கூறப்படும் இந்தோ ஐரோப்பிய இனத்தவர் இந்தியாவுக்குள் வந்த காலம் கி. மு. 2000க்கும் கி. மு. 1000-க்கும் இடைப்பட்ட காலம் ஆகும். அப்போது இப்பகுதியில் சரஸ்வதி, காபூல் முதலிய பல ஆறுகள் வளமாக ஓடியதையும் இங்குள்ள மக்கள் கோட்டை கொத்தளங்கள், உயர்நீதி பயிர்த் தொழில்' வாணிபம் ஆகியவற்றுடன் வாழ்ந்ததாக இருக்குவேதம் குறித்துள்ளது.

ஆரியர் வருவதற்கு முன்பே கி. மு. 4000க்கும் கி. மு.

2500க்கும் இடைப்பட்ட காலங்களில் இப்பகுதியில் சிந்து வெளி நாகரிகமும், அதற்கும் முற்பட்டு கி.மு. 3000க்கு முற்பட்டு பலூச்சிஸ்தானத்தில் வேறுபல புல்வெளி நாகரிகங்களும், இவற்றுக்கும் மேற்கே கி.மு. 3000க்கு முற்பட்ட உலகப்புகழ் பெற்ற ஏலமிய சுமேரிய நாகரிகங்களும் வாழ்ந்திருந்தன என்று கூறுகிறோம்.

வளமான இப்பகுதி வளங்கெடத் தொடங்கியது இந்தோ ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே என்றும், நாகரிகமிக்க இப்பகுதியில் சிந்துவெளி நாகரிகம் போன்ற பல மிகப் பழமைவாய்ந்த நாகரிகங்களின் அழிவுக்கும் அவர்கள் வருகையே காரணம் என்றும் அறிகிறோம்.

கி.மு. 2000-ல் வாழ்ந்த எகிப்திய அரசன் சேமோயாஸ்திரிஸ் என்பவன். அவன் காலத்திற்கு முன் ஒரு ஆசியா வழியாக எகிப்தியர் சீன நாட்டுடன் வாணிகம் செய்துவந்தனர். இந்தோ ஐரோப்பியர் வருகையால் கி.மு. 2000 லிருந்து ஒரு ஆசிய வழி அமைதியான நாகரிக ஆட்சியற்ற வழியாய்ப் போய்விட்டதனாலேயே, அவன் சீனாவுக்குத் தமிழக வழியாகவும் மலேயா வழியாகவும் கடல் வழியில் வாணிகத்தைத் திருப்பினான் என்றும் அதற்காகவே சூயசில் கால்வாய் வெட்டினான் என்றும் எகிப்தியர் வரலாறு கூறுகிறது.

ஆரியர்கள் நடுஆசியா வந்த காலம் கி.மு. 2000க்குச் சற்று முன்பின்னான காலம் என்பதை இது காட்டுகிறது. ஆரிய நாட்டில் அவர்கள் தங்கி அந்நாட்டு நாகரிக மக்களுடன் கலந்த பின்பே தம்மை அவர்கள் 'ஆரியர்' என்று கூறிக்கொண்டனர் என்று நாம் உய்த்துணரலாகும்.

சென்னைச் சிறையில் பேராசிரியர் க. அன்பழகன்

இந்தோ ஐரோப்பிய இனத்தவர் தென் ஆசியாவிலும் தென் ஐரோப்பாவிலும் புகுமுன் இப்பகுதிகளில் நிலவிய பழங்குடி நாகரிகங்கள் யாவுமே கடல் வாணிக வாழ்விலும் உழவு நாகரிகத்திலும் மேம்பட்டவர்களாய் இருந்தனர். ஆனால் மலைப்பகுதியடுத்து வாழ்ந்தவர்களுக்கு உழவே உயிர்த்தொழிலாய் இருந்தது. இப்பகுதியில் வாழ்ந்த ஆரிய நாட்டினர் தமிழினத்தவர்களாயிருந்திருக்க வேண்டும், தம்மை உழவரென்று பெருமிதத்துடன் கூறிக்கொண்டதனாலே, உழவர் நாடு, மேலானவர் நாடு என்ற பொருளில் இவர்கள் தம் நாட்டை ஆரிய நாடு என்று அழைத்திருக்க வேண்டும். அவர்களுடன் கலந்துவாழ்ந்த இந்தோ ஐரோப்பியரும் தம்மை ஆரியர் என்றே கூறிக்கொண்டு, அப்பெயருடனே பாரசிகத்துக்கும் இந்தியாவுக்கும் வந்திருத்தல் வேண்டும்.

ஆரிய நாட்டினர் தமிழினத்தவராகவே இருந்திருக்க வேண்டும் என்பதற்கு பாரசிக, இந்திய ஆரியரின் வரலாறு ஒரு சான்று ஆகும்.

இந்திய நாகரிகம் ஆரிய திராவிடக் கலப்பு நாகரிகம் என்பதை நாம் அறிவோம். இந்தக் கலப்பின் ஒவ்வொரு படியிலும் ஆரியச் சார்பான ஒரு பண்பாடும் திராவிடச் சார்பாளர் ஒரு பண்பாடும் போட்டியிடுவது காண்கிறோம். ஒவ்வொரு படியிலும் பல தெய்வ வழிபாடு, மதுபானம், கொலை வேள்வி, சாதி வருணமுறை, சடங்காசாரம், பழைய குருட்டு நம்பிக்கைகள், ஆகியவற்றை ஆரியச் சார்பாளர் ஆதரிப்பதையும், மற்றொரு பக்கம் திராவிடக் காப்பாளர் இவற்றை எதிர்ப்பதையும் காண்கிறோம். இந்தத் திராவிட எதிர்ப்பணியின் கருத்துக்களை நமக்கு ஒரே மொத்தமாகத் திருக்குறள் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்தியாவில் இந்தத் திராவிட எதிர்ப்பின் ஒரு படியை கி.மு. 6ம் நூற்றாண்டில் புத்த சமண சமய எதிர்ப்பாகக் காண்கிறோம். இதே திராவிடக் கொள்கை அடிப்படையில் ஆரியர் இந்தியாவுக்கு வருமுன் நடு ஆசியாவிலேயே சரதுட்டிரர் சமயமாகிய ஈரானிய அல்லது பார்சி சமயம் எதிர்ப்பது காண்கிறோம். சரதுட்டிரர் காலம் கி.மு. 2000க்கும் கி.மு. 1200க்கும் இடைப்பட்டதாகும். திராவிடக் கோட்பாடு அல்லது திருவள்ளுவர் கோட்பாட்டின் மிகப் பல கூறுகளைப் புத்த சமண சமயங்களைப் போலவே இப் பார்ஸி சமயமும் கொண்டு ஆரியச்சார்பான ஆரியத்தை எதிர்ப்பது காண்கிறோம்.

ஆரியம் என்று நாம் கூறும் நாகரிகத்தைத் திருவள்ளுவர் ஒரு நாகரிகமாக அல்லது கொள்கையாக எதிர்க்கவில்லை. தீய பண்புகளாகவே எதிர்க்கிறார். ஆனால் அதை இன்னும் முனைப்பாகப் புத்தரும் சமண முதல்வரான மகாவீரரும் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் எதிர்க்கின்றனர். கி.மு. 1500க்கு முன் அதையே அவர்களிலும் தீவிரமாக ஜரதுஷ்டிரர் எதிர்ப்பது காண்கிறோம். அது மட்டுமல்ல. முதல் எதிர்ப்பில் இரு சாராரும் தம்மை ஆரியர் என்றே கூறிக் கொண்டாலும் எதிர்ப்புக் கொள்கையுடன் நிற்காமல் இன்னும் ஆழ்ந்து செல்கிறது. ஜரதுஷ்டிரரும் பார்சியரும் ஆரியரும் ஒரு கடவுளை வழிபட்டனர். இந்திய ஆரியரோ பல தெய்வங்களை வழிபட்டனர். தவிர, ஜரதுஷ்டிரர் தம் ஒரு கடவுளையும் அவர் சார்பான நல் தெய்வங்களையும் அசுரர் என்றும், எதிரிகளின் தெய்வங்களை பேய்கள் என்ற பொருளையுடைய 'தேவ' என்ற சொல்லால் அழைத்தனர். இந்திய ஆரியரோ தம் நல் தெய்வங்களைத் தேவர் என்றும், எதிரிகளின் தெய்வங்களை 'அசுரர்' என்றும் அழைத்தனர்.

நடு ஆசியாவில் ஆரிய நாட்டில் ஆரிய நாட்டவரான தமிழினத்தாரும் வந்தேறிகளான இந்து ஐரோப்பியரும் கலந்தே ஆரியராயினர். ஆனால் இனங்கள் கலந்த பின்னும் இன நாகரிகப் பண்பாடுகளில் வேற்றுமை நீடித்து உக்கிரமாயின. தமிழினப் பண்பாடு அதாவது ஆரிய நாட்டுப் பண்பாட்டை ஆதரித்தவர்களே ஜரதுஷ்டிரர் தலைமையில் போராடிய பார்சி சமயத்தவரின் முன்னோர் ஆவர். வந்தேறிகளான

(20-ம் பக்கம் பார்க்க)

இந்திய தேசியம் ஏற்படுமா?

கோவை. க. இரத்தினம்

○

பரந்து விரிந்துக் கிடக்கும் இத்துணைக்கண்டம் முழுதும் இன்று ஒலித்துவரும் ஒரு சொல் தேசிய ஒருமைப்பாடு! நாம் எல்லோரும் இந்தியர்; அனைவரும் இந்தியத் தாயின் புதல்வர்கள் என்ற முழக்கம் காங்கிரசுத் தலைவர்களின் புதிய சுலோகமாக இருக்கிறது!

அதுமட்டுமல்ல; ஒற்றுமையுணர்ச்சியை சட்டத்தின் துணை கொண்டாவது ஏற்படுத்திவிட வேண்டும் என்று துடிக்கின்றனர் ஆட்சியை அலங்கரிக்கும் கொலுப் பொம்மைகளில் சிலர். அதன் விளைவாகத்தான் தேர்தலுக்கு நிற்கும் எல்லோரும் தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்ற விதியை வகுத்து, அதற்கு அரசியல் சட்டத்திலும் இடம் தேடித்தந்துள்ளனர்!

தேர்தலுக்கு நிற்க விரும்பும் எவரும் பிரிவினை எண்ணம் கொண்டவர்களாக — நாட்டைத் துண்டாடும் நோக்கம் படைத்தவர்களாக இருக்கக்கூடாது. எல்லோரும் இந்திய மக்கள் என்ற உணர்வு அவர்களுக்கு இருக்க வேண்டும் என்பது சட்டத்தின் கட்டளை!

சட்டத்தில் இப்படி ஒரு விதி செய்துவிடுவதாலோ, அல்லது மேடைதோறும் ஒருமைப்பாட்டு முழக்கம் எழுப்பப்படுவதாலோ நாட்டில் தேசிய ஒற்றுமை ஏற்பட்டுவிடுமா?

தேசிய உணர்வு என்பது பண்பாட்டு அடிப்படையில் ஏற்படுவதாகும்! பண்பாட்டு அடிப்படையில் இணைப்பு இல்லாத எந்த ஒரு இனத்தையும் மற்றொரு இனம் ஏற்று, இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து கொள்ளச் சம்மதிக்கும் என்று எண்ணுவது அசல் பைத்தியக்காரத்தனமாகும்!

வேண்டுமானால், ஒரு இனம், மற்றொரு இனத்துடன் நேசமாக —நட்பாகப் பழக முயற்சி செய்யலாமே தவிர, சட்டத்தின் மூலம் ஒன்றாக்கிவிடமுடியாது. அதுவும் அந்த ஒற்றுமையுணர்வானது இயற்கையாக எழவேண்டும். ஆட்சிக் கோலை நீட்டி ஒற்றுமையை உண்டாக்க எண்ணினால் விபரீதமான வேறு பலன்களைத்தான் ஆட்சியாளர்கள் அறுவடைசெய்யவேண்டிவரும்! அதுவும் இந்தியா போன்ற பல இன மக்களும், பண்பாட்டு பழக்க வழக்கங்களும் நிறைந்த ஒரு நாட்டில் ஒற்றுமை என்பது என்றுமே சாத்தியமல்ல! இதற்குக் கடந்த கால அதன் வரலாறே சான்று கூறும்!

அக்பரும், அசோகனும் ஏற்படுத்த முடியாத ஒற்றுமையை அலகாபாத் பண்டிதரால் ஏற்படுத்திவிடமுடியும் என்று நம்புவது வெறும் ஆசையே.

வெள்ளையன் வருகை-அவனிடமிருந்து நாம் விடுதலை பெறவேண்டும் என்ற உணர்வு துணைக்கண்டத்துத்து மக்களை ஒன்றுபடச் செய்தது! அந்த ஒற்றுமையை அப்படியே கட்டிக்காக்க பண்டித நேரு விரும்புகிறார்! முடியுமா?

நேருவுக்குப் பின் யார்? என்ற பிரச்னை இன்றைய தினம் அனைத்திந்தியாவிலும் பேசப்பட்டுவருகிறது. ஆனால் அவர்கள் வாய்விட்டுப் பேசாத மற்றொரு கேள்வியும் உண்டு. அதுதான், நேருவுக்குப்பின் இந்தியா என்னவாகும்?''

இந்தக் கேள்வியை இன்று ஒவ்வொரு காங்கிரசுத் தலைவரது உள்ளமும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது! நேருவின் தலைமையில், அவர்தம் பெருமையில் இந்திய மக்கள் இன்றைய தினம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர்!

ஆனால் நேருவுக்குப் பின்?

வடக்கே உள்ள லால்பகதூர், மொரார்ஜி, பட்டீல் இவர்களின் பேச்சுக்கு இந்தியா செவி சாய்க்குமா? நிச்சயம் இந்த துணைக் கண்டம் கேட்காது! இது உறுதி!

ஆகவேதான் அவசர அவசரமாக நேரு இருக்கும்போதே— நாம் அனைவரும் இந்தியர் என்ற உணர்வை ஏற்படுத்திவிட ஏதேதோ சட்டங்களைத் தீட்டுகின்றனர் ஆட்சியிலுள்ளோர். அவர்களையெல்லாம் அந்த நிலையில் கொண்டுபோய் நிறுத்தியது ஏது?

திராவிட முன்னேற்றக் கழகம்!

தி.மு. கழகத்தின் தனிநாட்டுக் குரல், அவர்களை இப்படி ஒரு வேகமான முடிவுக்கு உந்தித் தள்ளியுள்ளது!

இன்றையத்தினம் அறிஞர் அண்ணாவின் குரலுக்கு—தடை போடுவதன் மூலம் அது தடுத்து நிறுத்தப்பட்டுவிடுமா என்றால் நிச்சயம் இல்லை! அது வெற்றி பெற்றே தீரும்!

தடைப்போட்டு ஒரு இயக்கத்தின் கொள்கைகளை அழித்துவிடுவது—அல்லது நசுக்கிவிடுவது என்பது மிகப்பழைய சர்வாதிகாரிகளின் காட்டுமுறை. அந்தப் பாதையில் டெல்லி அரசு நடைபோடுவதுதான் வெட்கத்துக்குரியதாகும்!

கொள்கையை கொள்கையால் மோதி வெற்றிகாண்பதுதான் ஜனநாயக மரபு! வார்த்தை வாதத்தால் வெல்ல முடியாதவர்களின் கடைசி ஆயுதம்தான் சட்டம்! இத்தனை கொள்கைப் பிடிப்பற்றவர்களின் இந்த ஒற்றுமை நாடகம் எத்தனை காலம் நிலைத்து நிற்கும்?

ஜாலவித்தைக்காரன் 'மந்திரக் கோலை' ஆட்டி மக்களை ஏய்ப்பது போல, ஆட்சி மந்திரத்தைக் காட்டி, நேருவின் புகழைச் சொல்லி இந்திய ஒற்றுமையை ஏற்படுத்தப்பார்க்கின்றனர். அவர்களது மாயாவாதக் கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொண்டு நாம் எல்லோரும் இந்தியர் என்ற உணர்வு பெற்றுவிடுவார்கள் என்பது வடநாட்டுத் தலைவர்களின் தணியாத ஆசை!

அவர்தம் எடுபிடிகளாக இங்கு உள்ள குட்டி மந்திரிகளும், காங்கிரஸ் தலைவர் என்ற பெரும்பதவி தேடிக்கொண்ட பெம்மான் காமராசரும் போகுமிடமெங்கும் இன்று தி. மு. க.வைத் திட்டித் தீர்க்கின்றனர். தி. மு. க. ஒரு நாசகார இயக்கம் என்று வாய்ப்பறை கொட்டுகின்றனர். எப்படியேனும் கழகத்தின் பின்னணியில் அணி திரண்டு நிற்கும் மக்களை தங்கள் மயக்க வலைக்குள் வீழ்த்திவிடவேண்டும்; தேசிய ஒருமைப்பாடு தாரகமந்திரத்தை ஜெபிக்கச் செய்துவிடவேண்டும் என்று துடிக்கின்றனர்.

பாவம்! அவர்களுக்கு நம் அனுதாபம்!

தடைச்சட்டம் கொண்டுவந்து கழகத்தையே அழித்துவிட முனைந்தனர். அதிலும் தி. மு. க. தப்பித்துக் கொண்டதே என்ற ஆத்திரம் அவர்களுக்கு! பள்ளி விழாவானாலும், அது பட்டமளிப்பு விழாவானாலும் தி. மு. க.வைத் திட்டுவதுதான் அவர்கள் குறிக்கோளாகி விட்டது!

'கூட்டம் போடுகிறாயா? இது பற்றிப் பேசக்கூடாது!'

'தேர்தலுக்கு நிற்கிறாயா? பிரிவினை பற்றிப் பேசக்கூடாது.'

—இப்படி எடுத்ததற்கெல்லாம் அயூப்கான் பாதையில் ஏன் ஓடுகிறார்கள் இவர்கள்? பாகிஸ்தானில்தான் அயூப்கானை எதிர்த்து எவருமே பேசக்கூடாது! அதைப்போலத்தான் இங்குமா? அப்படியென்றால் இங்குள்ள அமைச்சர்கள் எல்லாம் சர்வாதிகாரிகளாக முடிசூட்டிக் கொண்டார்களா?

ஒரு காலத்தில் காங்கிரஸ் பாகிஸ்தானில் ஓங்கிப் புகழ் படைத்திருந்தது! கராச்சி காங்கிரஸ், லாகூர் காங்கிரஸ் இவைகளின் புகழ் பாடுவர் இன்றைக்கும் சில காங்கிரசுத் தலைவர்கள்! இன்று பாகிஸ்தானில் ஒரு சிறு காங்கிரஸ் கமிட்டியேனும் உண்டா? ஏன் இல்லை? அயூப்பின் சர்வாதிகாரம், இடம் கொடுக்கவில்லை என்பார்கள்!

ஆனால் அதே பாதையில் இவர்கள் ஏன் ஓடுகிறார்கள்?

பேசுவது ஜனநாயகம்! செய்வதோ ஜனநாயகக் கொலை!

சகோதரத்துவம், சமத்துவம் என்கிறார்கள்! சண்டாள இந்தி உங்களுக்கு அக்காள் என்கிறார் நேரு!

'இந்தி பேசுபவன்—இந்தியன் ஆகவே நான் உயர்ந்தவன் என்கிறான் இந்திக்காரன்! அங்கிருந்துதான் தேசிய ஒருமைப்பாட்டு முழக்கமும் ஒலிக்கிறது.

பண்டிதர் நேருவுக்குப் பின் மொரார்சியோ, பட்டீலோ, லால்பகதூரோ, இந்திய ஒற்றுமையைக் கட்டிக் காத்துவிட முடியாது! இந்தியா உடைந்த கலமாகத்தான் சிதறிப் போகும்! எந்த வடநாட்டுத் தலைவருக்கும் தென்னகம் செவி கொடுத்துக் கேட்காது! அது அறிஞர் அண்ணாவின் பேச்சைத்தான் கேட்கும்! அவர் பின்னால் அணி திரண்டு நிற்பதில்தான் பெருமை கொள்ளும்!

காமராசரைப் பற்றிமக்கள் நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள்; நாவலர் என்ன சொல்கிறார் என்றுதான் கவனிக்கும்! கருணாநிதியும் நடராசனும், நற்புகழ் கொண்ட தி. மு. க. தொண்டர்களும் கூறுவதைத்தான் நாடு கேட்கும்! அது நிச்சயம்!

> நான், சனநாயகமறிந்த பண்டித ஜவகர்லால் நேருவுக்கு மறுபடியும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்- தூங்குகிற நேரத்தில் கயிறு திரித்ததைப் போல் மைனர் பிள்ளைகளிடத்தில் கையெழுத்து வாங்கியதைப் போல் — அவர்களிடத்தில் உள்ள பொருள்களைப் பறித்துக் கொண்டதைப்போல் அரசியல் நிர்ணய சபையில், சுயராஜ்யம் கிடைத்த போதையிலே, இருந்த மக்களை உட்கார வைத்து, இந்தியை ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கிறீர்கள்— என்று!
>
> —அறிஞர் அண்ணு

தவித்த போது, பொங்கி எழுந்த என் இதயத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு மறைந்து நின்றேன்—மலைத்தும் போனேன்! தங்களுடைய சங்கிலியை...''

இன்ஸ்பெக்டர் படித்து முடிக்கவில்லை! கனகமணி கடிதத்தைப் படித்தபோது மென்று தடுத்து விட்டான்.

கனகமணியின் உண்மை வரலாற்றைப் புரிந்துகொண்ட இன்ஸ்பெக்டர், ஒரு பெருமூச்சு விட்டார்! பரிதாபத்தோடு நின்ற கனகமணிக்கு எந்தவித ஆறுதலும் சொல்ல முடியவில்லை அவரால்!

இருந்தாலும்,

ஒருவரின் மனக் குமுறலைக் கேட்டதும், ஏதாகிலும் சொன்னால்தான் அவர்களின் உள்ளம் அமைதி கொள்ளும். அதனால், 'கனகமணி நடந்ததை மறந்து விடு! உண்மை ஒருபோதும் மறப்பதில்லை! போ! எல்லோரையும் போல வாழ வழி தேடு! என்றார் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெச்டருக்கு வணக்கத்தைச் செலுத்திவிட்டு, நேரே அவன் உட்காரும் அந்தப் பெட்டிக் கடைக்குப் போக வேகமாக நடந்தான்!

அவனுக்கு முன் ஒரு குழந்தை திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தது! அக்குழந்தையைக் கண்ட கனகமணிக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது.

'ஒரு மனிதனை கெட்டவனாக மாற்றுவதும், நல்லவனாக ஆக்குவதும் இந்த உலகம் கற்ற பாடமாகும்' என்பதனை பலமுறை பலருக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லும் அந்த வாசகம் அப்போது அவன் நினைவுக்கு வந்து விடவே மீண்டும் சிரித்தான்!

'கொடியவன்' என்று அறிவற்றவர்கள் பிதற்றினால், அப் பிதற்றலின் படி அறிவுள்ளவன் நடந்து விடுவதா? அங்ஙனம் நடந்தால் தீமைதானே நிலை பெற்று நிற்கும்? கனகமணி என்ன மடையனா? மதிக் குழப்பங் கொண்டோரின் பின்னணிப் பாட்டிற்கு ஏற்ற முறையில் தன்னை மாற்றிக் கொள்ள!

'யார் என்ன நினைத்தாலும் நினைக்கட்டும், என் அறிவு என்ன சொல்கிறதோ அதன்படி என் மனம் நடக்க பண்புள்ளதாக ஆகி இருக்கும்போது மற்றவர்களைப்பற்றி கவலை கொள்ளவோ—பயப்படவோ அஞ்சேன்! என்ற நெஞ்சுறுதியோடு அக் குழந்தையின் பின்னே நடந்துகொண்டே இருந்தான்.

நடந்துகொண்டிருந்தகுழந்தை தெருக்கோடியிலுள்ள மாடி வீட்டிற்குள் நுழைந்துவிட்டது. அவ்வீட்டிலிருந்து ஒரு பெண் வந்து வெளியே நின்றாள். கனகமணியின் கண்கள் அவளைக் கண்டு விட்டதும், படபடவென்று அடித்துக் கொண்டது. நடையை வேகமாக்கிக்கொண்டு வந்தவன் மடைக்குள் அடங்கிவிட்ட நீர் போல், நின்றுவிட்டான்! திகைப்பூண்டு மிதித்தவன் திசை தெரியாது அலைந்ததுபோல், அவன் நிற்பதைக் கண்ட அம்மாடி வீட்டுக்காரி, அவனருகில் ஓடி வந்தாள். அவன் கரத்தை உரிமையோடு பற்றினாள்.

'மறக்க முடியாதவரே! மனதில் நிறைந்தவரே! மாறாத சோகம் தீராது ஈந்தவரே, வருக! என்று அவள் நீல நிறக் கண்கள் வேண்டுவது போல அவனைப் பார்த்தது!

'வஞ்சகியே! என் நெஞ்சில் நின்று, நஞ்சாகி இரத்த நாளத்தில் கலந்தவளே! எங்ஙனம் நான் வருவேன் இரஞ்சிதமே'! என்று அவன் குழி விழுந்த கண்கள் பதில் சொல்லுவதுபோல், அவள் மலர்விழிகளை பார்த்தது!

'மஞ்சள் கயிறு மார்பிலாட பிஞ்சுக் குழந்தை நின் கரத்தில் தவழ—மாற்றான் மஞ்சத்தில் துயிலும் இரஞ்சிதமே! நான் அங்கு வருவது நீதியா?' என்று கனகமணி பேசவில்லை. அவன், அவ்வண்ணம் பேசுவானோ என்று இரஞ்சிதம் நினைத்தாள்!

'வாருங்கள்!' என்றாள் இரஞ்சிதம்.

அவன் பேசவில்லை. பாசமிருந்த பாவைபோல் அவள் பின்னே சென்றான்.

மதுரைச் சிறையில் மாவட்டச் செயலாளர் எஸ். முத்து

வாசற்படியை ஏறவில்லை—வெளியே நின்றான்!

'ஏன் நீற்கிறீர்கள் ? — கேட்டாள்.

'உங்கள் வீட்டு விருந்தாளியாக வரவில்லை! உங்கள் நலனை விசாரிக்கவும் வரவில்லை. நீ யாரோ?—நான் யாரோ?...... ஒன்று,

என்னிடமுள்ள தங்க ஆரத்தை என் இதயம் என்றும் மறவாத ஒருவளுக்குக் கடைசி முறையாகக் கொடுத்துவிட வேண்டும் என்றே நான் இங்கே வந்தேன்.

இதோ, அந்த ஆரம்! என்னை திருடனாக்கிவிட்ட ஆரம்! தாழ்ப்பாளற்ற இதயத்தில் தனிப்பெரும் சிறப்புடன் செங்கோலோச்சிக் கொண்டிருந்த என் அன்புக்கரசியை பிரித்துவைத்த ஆரம்!

இதைத்தான் ஈந்து விட்டுப் போக இவ்வண் வந்துள்ளேன். மறுமொழி வேண்டாம்; மன நிம்மதியுடன் அளிப்பதை மகிழ்வு பெற பெற்றுக்கொள்ளுவதே மாறாத அன்பின் அடையாளமாகும். இளமை நட்பு, வெறும் பாலைவனமென்று எண்ணுவீர்களானால்—ஏதோ ஒரு மோகத்தால் மயங்கி விட்டதாக நினைப்பீர்களானால் 'வேண்டா'மென்று வாங்க மறுத்துவிடுங்கள்! உறவும், உரிமையும் கொண்டவன்போல் கனகமணி மொழிந்தாலும், மீண்டும் தலைவைத்து அப்பக்கம் படுக்க அவனது மனம் இடந்தரவில்லை என்பது உறுதி.

பேசியவன், அவள் முகத்தைப் பார்க்க நாணமுற்றான்! வெறுப்புடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்!

'கடந்தகால கதையை மறந்து விடுங்கள்! நம்மைப் பிரிக்க வேண்டுமென்று என் தங்கை செய்த சதியால் உங்களை ஊரும், உறவும் உங்களோடு உயிருக்குயிராகப் பழகிய நானும், தாங்கள் மீது போடப்பட்ட பழியினை நம்பி விட்டேன்.

அதன் பயன் ?

மாற்றான் மனைவியாகி விட்டேன். பொன்மதிக்குத் தாயாகி விட்டேன். நின் கருணை நிறைந்த கண்களின் பார்வைக்குத் தெரியாமல் நான் மறைந்தாலும் மனத் திரையில் மறையாது ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். எப்படி

மறக்கமுடியும் தங்கள் உயிர் ஓவியத்தை என்றுள் இரஞ்சிதம்.

'உன் தங்கை எங்கே?'

'என் கணவனை ஏமாற்றி அழைத்துக்கொண்டு ஓடி விட்டாள்!'

'உன்னோடு உன் கணவன் இல்லையா?'

'இல்லை. என் தங்கை இராதையுடன் என் கணவர் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார் சென்னையில் சில காலம்.

ஒரு நாள், ஓடும் மின்சார வண்டியிலிருந்து விழுந்து பிணமாகி விட்டாள் என் தங்கை இராதை!

'உன் கணவன்?'

'தற்போது ராணுவத்தில் உயிரோடு இருக்கிறார். வருவதாகவும் கடிதம் போட்டிருக்கிறார். நடந்துக்கொண்டிருக்கும் சீனாக்காரன் சண்டையால், அவர் நினைக்கிற படி வர முடியாது என்று எண்ணுகிறேன், அவர் குறித்ததுபோல் வந்தாலும், நீங்கள் எங்களிடத்திலேயே சகோதரர் போலிருக்கலாம். தங்களைப் பார்த்ததும்—பேசிக் கொண்டிருந்தாலே என் துன்ப பாரமே குறைந்து குதூகலத்துடன் என் கணவருக்குச் சேவை செய்வேன். இல்லை என்றால், என் எண்ணமெல்லாம் உங்கள் மீதே இருக்கும்; குடும்பத்தில் சோகப்புயல் வீசும்: எங்களை வாழ வைக்க வாருங்கள் எங்கள் வீட்டிற்கு' - மன்றாடினாள் அவனோடு.

சிரிப்பது அவன் வழக்கம்!

புதிரான, அவள் காலத்தின் கோலத்தைக் கேட்கவே அவனுக்கு சிரிப்பு வந்துவிட்டது! சிரித்துவிட்டான். முல்லை மலர்ந்தால் மணம் கமழ்வதுபோல் அவன் மோகன வதனத்தில் அந்த சிரிப்பு எழில்மிக்கத் தோற்றத்தை அளித்து விட்டது—களித்துவிட்டாள் அவளும்!

கணவனோடு வாழவேண்டியவள், தனிமையில் தணலாக மாறிக் கிடந்தால், அங்கு தென்றல் போல இளமைக் காதலன் செல்வதோ அவனை தன்பால் இழுக்கத்தான் அர்த்தமேயன்றி, அவள் கணவனோடு வாழவைக்க அல்ல!

கனகமணி, இரஞ்சிதத்தின் நெஞ்சில் நிரந்தரமாக நிலைத்து விட்ட வைரச் சிலை. உயிரையே கனகமணி மீது வைத்து—சடலம் மட்டுமே கணவனிடம் ஒப்படைத்து—பாலைநிலத்துப் பயிர் போல், காலங்கழித்து வருகிறாள் இரஞ்சிதம். இத்தருணத்தில் அவன், அவள் கண்களுக்கு புத்துயிர் ஊட்டுவதுபோல் அங்கு சென்றால், அவனை, அவளால் எக்காரணத்தைக் கொண்டும் மறக்க முடியாது என்பது உண்மை!

ஏன்,

மாலையிட்ட மணாளனை உதறித் தள்ளி விடவும், துணிந்து விடுவதும் இயற்கை! இச் சூழ்நிலைகளையெல்லாம், தன் அனுபவத்தில் கண்டறிந்த கனகமணி, தன் கையில் வைத்துக் கொண்டிருந்த தங்க ஆரத்தை அவளிடம் கொடுக்க நீட்டினான் கையை.

அவளும்,

அன்பு பெருக—புன்னகை பூக்க—உள்ளம் பூரிப்பால் எழ, அந்த ஆரத்தை பாசமும் — நேசமும் கலந்த பார்வையோடு வாங்கி ஆனந்தத்தோடு அணிந்துக் கொண்டாள்.

சுருக்கங்கள் அழகு செய்யும் நெருக்கமில்லா கழுத்தில் கனகமணி அளித்தத் தங்கச் சங்கிலி தொங்கியவுடன் வானில் மின்னும் கொடி மின்னல் போல் அவள் அங்கமெல்லாம் அழகு ஓடி ஓடி மின்னியது!

ரோசா வண்ணம் போன்ற மார்பின் நடுவில் வந்து நின்ற ஆரத்தின் நடு பதக்கத்தைப் பார்த்த இரஞ்சிதம், கனகமணியைப் பார்க்க, வெட்கத்தோடு—மேகத்தின் விளிம்பில் காணுகின்ற பொன்னிற கரை போன்ற சின்னஞ் சிரிப்பை செந்தமிழ் உதட்டில் தேக்கி, மான் விழியின் இமையை மெதுவாகத் திறந்து—மை போன்ற கண்ணின் கருவிழியின் நோக்கியபடி திமிர்ந்து பார்த்தாள்.

அவனில்லை அங்கே!

புயலால் உந்தப்பட்டு உலகமெல்லாம் இடி முழக்கமிட்டு ஓடும் கார்மேகமாக மாறினாள்—திக்குத் தெரியாது ஓடினாள்! அவனைக் காணவில்லை! அவள் அமையும் அடையவில்லை! ஆற்று நீர் போல், அழுத வண்ணமாகத் திரும்பினாள்—அழித்தெழுத முடியாத உருவத்தை இதயத்தில் வைத்து, நித்தம் நித்தம் நினைவில் வைத்து வணங்கிக்கொண்டே அழுதாள்.

காலம் மாறியது!

போர்க்கோலம் பூண்டிருந்த இரஞ்சிதத்தின் கணவன் ஓய்வு பெற நாடு திரும்பினான்!

இரஞ்சிதமும் அவன் கணவன் இராஜனும் ஒன்று சேர்ந்தனர். இராணுவத்தில் அவன் பட்ட இன்னல்களை இரஞ்சிதத்திற்குச் சொல்லிக் கொண்டுதான் வந்தான் இராஜன்.

ஒரு நாள்,

இராஜனின் உயிரை மீட்ட உத்தமன் ஒருவனின் புகைப் படத்தை இரஞ்சிதத்தினிடம் எடுத்துக்காட்டினான்.

'இவர்தான் என் பொருட்டு உயிரை விட்டவர்' என்று கூறி இரண்டு சொட்டு கண்ணீரையும் உதிர்த்தான்.

படத்தை வாங்கிப் பார்த்த இரஞ்சிதம் 'கோ'வென கதறி அழுதாள்.

'யார் இவர்?'—இராஜன் கேட்டான்.

'என் மாமன் மகன் கனகமணி எனது அந்த நேரத்தில் பொய்ச் சொல்லி தப்பித்துக் கொண்டான்!

அதனால்,

வாடாத மலர்ச்சூடி—வணங்காத நாளின்றி—கோணாத புன்னகையுடன் ஓவியமாக அவர்கள் வீட்டில் இடம்பெற்று விட்டான் கனகமணி!

○

13-ம் பக்கத் தொடர்ச்சி

ஐரோப்பிய இனச் சார்பான பண்பாட்டை வற்புறுத்தியவர்களே இந்தியாவுக்கு வந்த ஆரியரின் முன்னோர் ஆவர். இந்தப்போராட்டத்தில் பார்சிகள் வெற்றி பெற்றதாலே இந்திய ஆரியரின் முன்னோர் நடு ஆசியாவை விட்டு இந்தியாவுக்கு ஓடிவர வேண்டியதாயிற்று.

இந்தியாவிலும் பிரமதேசம் என்று அழைக்கப்படும் பாஞ்சாலத்திலுள்ள திராவிடர்களுடனும் கங்கை வெளியிலுள்ள திராவிடர்களுடனும் போராடி அவர்களுடன் கலந்தபின்னரே படிப்படியாக இருக்கு என்ற ஒரு வேதம் மூன்றுநான்காகி, வேதாங்கங்கள், ஆரியங்கள், உபநிடதங்கள், பாரத இராமாயணங்கள் ஆகியவைகளும் சமஸ்கிருத மொழியும் இலத்தியமும் உருவாக்கப்பட்டன.

தென்னாட்டு மக்களும் தமிழரும் கண்ட ஆரியநாகரிகம் உண்மையில் மூல இந்தோ—ஐரோப்பிய இனத்தவரின் நாகரிகமல்ல. நடு ஆசியாவிலிருந்தோ அங்குலம் அங்குலமாகத் திராவிடருடன் போராடியும் கலந்தும் எதிர்த்தும் ஏற்றும் வரவரத் திராவிடமயமாக உருவாகி வளர்ந்த புதிய இந்திய ஆரியநாகரிகத்துடன்தான்—அதாவது திராவிட ஆரியக்கலப்பு நாகரிகத்துடன் தான் தமிழரும் தென்னவரும் உறவாடினர்.

இந்தியாவில் ஆரிய மொழி, ஆரிய நாகரிகம் என்பவற்றிற்கும் திராவிட தமிழ் மொழி நாகரிகம் என்பவற்றிக்கும் உள்ள வேறுபாடு இரண்டு இனங்களின் வேறுபாடு அல்ல. அவை உண்மையில் ஆரியப்பண்பு பின்பற்றிய அதாவது சாதி வருணபேதம் மூடநம்பிக்கை ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட ஒரு திராவிட ஆரியக்கலப்பின மொழி—நாகரிகம் ஆகியவற்றுக்கும் உள்ள வேறுபாடேயாகும்.

இரண்டு நாகரிகங்களிலும் அடிப்படைக்கூறும் பொதுமைக் கூறும் ஒருமைப்பாட்டுக்குரிய பண்பும் திராவிட மொழி, திராவிட நாகரிகமேயாகும்.

வடஇந்திய மக்களும் தலைவர்களும் அரசியலாரும் இதை உணர்ந்துகொண்டுவிட்டால் இந்தியாவின் ஒருமைப்பாடு அசைக்க முடியாத ஒரு கற்கோட்டை ஆகிவிடும். அதைக்காக்க பிரச்சாரங்களோ, சட்டமுறைகளோ தேவைப்படமாட்டா. தவிர, இந்திய நாகரிகம் வேதபுராண இதிகாசங்களை மூலமாக ஏற்றுக்கொள்ளும் நாள்வரை, சாதிவருண இன வேறுபாட்டுப் பண்புகள் உள்ளூரக் கனிந்துக்கொண்டேயிருந்து நாட்டு மக்களின் ஒற்றுமையைக் குலைக்கவே செய்யும். இந்திய நாகரிகம் திருவள்ளுவர் மரபிலும் சங்க இலக்கிய மரபிலும் வந்த ஒன்று என்ற எண்ணம் தேசமக்களிடையே தோன்றுமானால், நாட்டு மக்கள் ஒருமைப்பாட்டுக்கும் முற்போக்குக்கும் அதைவிடச் சிறந்த சாதனம் வேறு தேவைப்படாது.

'ஆரிய' என்ற சொல்லே தமிழ்ச்சொல், மூல ஆரிய நாடு தமிழரும் தமிழினமும் வாழ்ந்து தமிழ்ப்பண்பு வளர்த்த ஒரு பழம் பெரு நாடு என்ற கருத்து இந்தியாவில் பரவுந்தோறும் இந்திய நாகரிகத்தில் ஒளியும் பெயரும் ஏறவழியுண்டு.

○

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம்ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

REGD No. 13617
தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

அணையா விளக்கு

[என். வி. என்]

நாடு வாழவேண்டும், எல்லோரும் நல்வாழ்வு பெற அவர்களோடு சேர்ந்து நாமும் வாழ வேண்டும்—என்ற தூய்மையான எண்ணமும், பரந்த உள்ளமும் கொண்டவர்களை மனித சமுதாயத்தில் காண்பதரிதாகி விட்ட காலம் இது.

இந்நிலையில் நமது தொத்தா அவர்கள் உயரிய நோக்கமும் அதற்கேற்ற பண்பும் கொண்டு வாழ்ந்து வந்தது நாமெல்லாம் பெற்ற பேறாகும்.

அருமை அண்ணா அவர்களைத் தேடி அவர்களது இல்லத்திற்குச் செல்லும் கழகத் தோழர்களை மட்டுமல்லாது, அண்ணாவுடன் நெருங்கிய தோழமை கொண்ட பிற கட்சித் தோழர்களைக்கூட வாயார வரவேற்று, அவர்களது குடும்ப நலனை விசாரித்து, குறையிருப்பின் அதைத் திருத்திக் கொள்வதற்கான புத்திமதியை உரிமையுடன் கூறும் தாயன்பு கொண்டவராய்த் தொத்தா அவர்கள் விளங்கி வந்தார்கள்.

1952-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது காஞ்சிபுரம் பாராளுமன்றத் தொகுதிக்கு கழக ஆதரவுபெற்ற வேட்பாளராக டாக்டர் ஏ. கிருட்டிணசாமி அவர்களும் காங்கிரஸ் வேட்பாளராக டி. செங்கல்வராயன் அவர்களும் போட்டியிட்டார்கள்.

தன்னை ஏன் கழகம் எதிர்க்க வேண்டும் என்ற கேள்வியைக் கேட்கவும், எப்படியாகிலும் அந்தப் போட்டியைத் தவிர்க்க வேண்டுமென்றும் எண்ணிய தோழர் டி. செங்கல்வராயன் அவர்கள் அண்ணா அவர்களைக் கண்டு கேட்கவில்லை. அதற்குப் பதிலாக காஞ்சிக்குச் சென்று தொத்தா அவர்களைச் சந்தித்து "தொத்தா—நானும் உன் மகன் தானே என்னை ஏன் கழகம் எதிர்க்கவேண்டும். டாக்டர் கிருட்டிணசாமி வேறு எங்கு நின்றாலும் வரக்கூடிய வசதியுள்ளவர். எனக்கு எதிர்ப்பு வேண்டாம் என்று அண்ணாவிடம் சொல்லுங்கள். இல்லையென்றால் உங்கள்வாக்கையாகிலும் எனக்கு அளித்துத்தான் ஆகவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

தோழர் செங்கல்வராயன் அவர்களின் வேண்டுகோள் தொத்தாவின் உள்ளத்தை உருகச் செய்து விட்டது. வரட்டும் அண்ணா, நான் கேட்கிறேன். நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம்" என்று ஆறுதல் கூறி அனுப்பினார்கள்.

அதுபோலவே அண்ணா காஞ்சி வந்ததும்,

'என்னடா அண்ணா! நம்ம செங்கல்வராயனும் கிருஷ்ணசாமியும் ஏன் ஒரே இடத்தில் போட்டி போடுகிறார்கள். செங்கல்வராயனும் நம்ம பிள்ளை தானே?' என்றெல்லாம் வாதிட்டரார்கள்.

அண்ணா அவர்கள் அதற்கான சமாதானம் எவ்வளவு சொல்லியும் தொத்தா அவர்கள் மன அமைதி கொள்ளவில்லை.

கடந்த இரண்டு திங்களுக்கு முன் காஞ்சியில் பாங்க் டைரக்டர்கள் தேர்தல் நடைபெற்றது. தொத்தா அவர்கள் நடக்கவும் இயலாத நிலையில் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

தேர்தல் நாளன்று தொத்தா ஓட்டுச் சாவடிக்குப் போகவேண்டும் என்று ஆவலுடன் இருந்தார்கள். ஆனால் வீட்டில் யாரும் அதற்கு இசையவில்லை. என்றாலும் தொத்தா அவர்கள் சம்மதிக்கவில்லை. தட்டுத் தடுமாறி வண்டியில் ஏறிச்சென்று, வாக்களித்துவிட்டு இல்லம் வந்து சேர்ந்தார்கள். பொதுத் தொண்டில் அவ்வளவு ஆர்வம் உடையவர் தொத்தா.

கழகத் தோழர்களிடம் மட்டுமல்லாது காங்கிரஸ் தோழர்களிடமும் கட்சப் பிரதிகட்சி மனப்பான்மையை வீடுத்து, தாயன்பு காட்டிய பெருந்தகையாளராய் விளங்கி வந்தார்கள் தொத்தா.

ஆனால் அரசியலைப் பொறுத்த வரை காங்கிரசுக்குத் தீவிரமான எதிர்ப்பாளராகவே இருந்து வந்தார்கள்;

ஜவகர்லால் நேரு போன்ற காங்கிரஸ் தலைவர்களைக் கழகத் தோழர்கள் தீவிரமாக எதிர்த்துப் பேசி அதைப் பத்திரிகைகளில் படித்துவிட்டால் தொத்தா அவர்கள் மனந் தாளமாட்டார்கள். 'எவ்வளவு வேண்டுமானாலும் எதிர்த்துப் பேசுங்கள். ஆனால் கடுமையான சொற்களால் நேரு போன்றவர்களைத் தாக்கிப் பேசாதீர்கள்' என்று புத்திமதி கூறுவார்கள்.

இவ்வாறு தொத்தா அவர்களது வாழ்நாளின் சிறப்புக்களைக் கூறுவது என்றால் ஏடு போதாது. நாமறிந்த வரையில் அந்தச் சிறப்புக்களை எண்ணுந்தோறும் தொத்தா அவர்களின் பிரிவு நமக்கே அதிர்ச்சியைத் தருகின்றதென்றால், தம்மை ஆளாக்கி விட்ட அருமை அண்ணா அவர்களின் மனம் எவ்வளவு வேதனையுறும் என்பதை எண்ணுந்தோறும் அவருக்கு நாம் எவ்வாறு ஆறுதல் கூறமுடியும்?

நமது வாழ்வை தமது வாழ்வாகவும், நமது தாழ்வை அவரது தாழ்வாகவும் கருதிக் குடும்பப் பாசத்துடன் பழகி வரும் அண்ணா அவர்களுடன் சேர்ந்து நாமும் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் புரியவில்லை.

ஆனால் தொத்தா அவர்கள் நிறைவாழ்வு பெற்றவர்கள் என்ற மன அமைதியுடன் தமது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டவர்கள் என்ற ஆறுதல் நம்மைத் தேற்றுகிறது. அந்த நிறைவாழ்வு என்ன?

திராவிடத்தின் அரசியல் வாழ்வில்—பொதுப்பணியில், உயர்ந்த பண்பைப் பரப்பி, அதை நிலை நாட்டி நாட்டின் நலனுக்கு அயராது பணியாற்றும் அருமை அண்ணாவை நமக்கும் நாட்டுக்கும் தந்துள்ளார்களே அதுதான் அந்த நிறைவாழ்வு.

அண்ணா அவர்களின் இல்லத்திற்கும் ஆயிரக்கணக்கான தோழர்களுக்கும் ஒளிவிளக்காய் விளங்கிவந்த தொத்தா அவர்களின் உடல் மறைந்தாலும் அவர்களின் சிறந்த பண்புகள் என்றென்றும் அணையா விளக்காய் அண்ணாவின் குடும்பத்திற்கும், கழகத் தோழர்களுக்கும் விளங்கிவரும் என்ற ஆறுதலுடன் அந்த வீரத் தாய்க்கு நமது பணிவன்பான வணக்கத்தைச் செலுத்துவோமாக!

—'தொத்தா' இராசமணி அம்மையார் நினைவுமலர்

தமிழ்த்திருநாள்!

[வித்துவான் கு. அமிர்தலிங்கம்]

களர் நிலமும் விளை நிலமாய்க்
காண்பதற்குப் பசுமையதாய்
தளர் வேதுவும் காணுமல்
தமிழ் மரபில் வந்த நல்லோர்
நிலம் திருத்தி நீர் பாய்ச்சி
நீள் விசும்பின் கீழிருந்து

உலகெல்லாம் உய்வதற்கு
உறு துணையாய் விளங்கி நிற்கும்
செந் நெல்லும் நற் கரும்பும்
தீங் கனிகள் பலவினமும்
நந் தமிழர் நலன்வேண்டி
நானிலத்தில் விதைத் துதவும்

உழவர்களின் உள்ள மதை
ஊக்குவிக்க ஓர் மனதாய்
குழவிமுதல் மூதறிஞர்
குழுவினரும் வாழ்த்துதற்கு
ஏற்றதோர் நன்னுளாம்
எங்குமொரு திருநாளாய்
போற்றி வணங்குகின்றேம்
பொங்கல் திருநாளே!

○



தலையங்கம் தொடர்ச்சி

களுக்கு மறைமுகமாக ஆதரவு தருவதாகவே யிருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆகவே காங்கிரஸ் சோஷலிஸ பாணி என்பது முலாம் பூசிய தங்கம் போன்றது என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாடகமெல்லாம் வோட்டு வேட்டையாடு வதற்கேயன்றி இதனால் வேறு எந்த முன்னேற்றமும் ஏற்பட்டு விடாது என்பதை ஆவடியிலிருந்து—புவனேஸ்வரம் வரை ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளை நினைவில் கொண்டு ஆராய வேண்டுகிறோம்.

ஆதலின் ஏழை—நடுத்தர மக்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளிலெல்லாம் ஆளவந்தார்கள் நடத்திவரும் கபடநாடகங்களுக்கு புத்தி புகட்டித் திருத்துவதற்கு வாய்ப்பாக அமைவது தேர்தலேயாகும்: அந்தத் தேர்தல்—பொங்கற் புதுநாளைத் தழுவி எதிர்நோக்கியுள்ளது.

தமிழகத்திலுள்ள அனைவரும் சென்ற ஆண்டு நடைபெற்ற முக்கிய அரசியல் சம்பவங்களை நடுநிலையில் நின்று ஆராய்ந்தால், அவர்கள் தரவேண்டிய தீர்ப்பு எது என்பதை திட்டவட்டமாக நினைவுபடுத்தும். மக்களின் அந்த மகத்தான தீர்ப்பு **உதயசூரியன்** ஒளிவீசட்டும் என்பதாகத்தான் இருக்கும் என்பதிலும் ஐயப்பாடு இருக்க முடியாது.

அதுபோலவே உதயசூரியன் தனது ஒளியை பரப்பிட துணையாய் நிற்கும் தோழமை உள்ளம் கொண்டவர்களும் வெற்றியுறுவதக்குத் தமிழக மக்கள் பெருந்துணை புரிய வேண்டுகிறோம்.

இந்த ஆண்டுப் பொங்கல் திருவிழா—நமது கழக முன்னணி வீரர்கள்—தோழர்களின் இல்லங்களில் முழு நிறைவு பெற்றதாக அமையவில்லை யென்றாலும் மக்களது வாழ்வில் சூழ்ந்துள்ள இருள் விரைவில் அகன்று என்றென்றும் ஒளிவீச, உலக மக்களோடும் நாடுகளோடும் நம் நாடும் சரிநிகர் சமத்துவம் வாய்ந்த உண்மையான சுதந்திர நாடாகத் திகழ பொங்கற் புதுநாளில் உறுதி கொள்வோமாக!

ஆண்டுதோறும் 'திராவிடன்' அளித்துவந்த பொங்கல் மலர் இவ்வாண்டு அளிக்க இயலாத நிலைமைக்குப் பெரிதும் வருந்துகின்றோம். மொழிப்போரில் கழகம் ஈடுபட்டுள்ளதின் காரணமாகவும்—அதன் விளைவாக ஏற்பட்டுள்ள பணிகளின் காரணமாகவும் மலர் வெளியிடப்படாத குறையை இச்சிறப்பு இதழ் மூலம் நிறைவேற்றி வைக்க முயலுகின்றோம்;

ஏறக்குறைய பொங்கல் மலரின் பொலிவோடு இவ்விதழ் வெளி வருவது வாசகர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் ஓரளவு மகிழ்ச்சியை அளிக்கும் என்று எண்ணுகின்றோம். விரைவில் திராவிடன், மலர் வெளியிடாத குறையையும் நிறைவேற்றி வைப்பான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இச்சிறப்பு இதழுக்கு கருத்தோவியங்கள் அளித்துதவிய கழக முன்னணியினர்கட்கும், நண்பர்கட்கும், மிகவும் குறுகிய காலத்தில் இத்துணைச் சிறப்போடு கொண்டுவருவதற்கு உறுதுணையாக இருந்த அலுவலகத் தோழர்கட்கும் மற்ற நண்பர்களுக்கும் இதயங் கனிந்த நன்றி வணக்கத்தைப் இப்பொங்கற் பெருநாளில் உரித்தாக்குகின்றோம்.

என்.வி.நடராசன்

கடைசிப் பக்கத் தொடர்ச்சி

வீட்டில் குடியிருப்போர்.

(3) சிறந்த கல்வியுடையவர்.

(4) காரியம் நிறைவேற்றும் ஆற்றலுடையவர்.

(5) அறநெறியில் ஈட்டிய பொருளைக்கொண்டு செம்மையான வாழ்க்கையை நடத்துபவர்.

(6) முப்பத்தைந்து ஆண்டிற்குக் குறையாமலும், எழுபத்தைந்து ஆண்டிற்குக் கூடாமலும் இருத்தல்.

(7) முந்திய மூவாண்டிற்கு உட்பட்டு எந்தவாரியத்திலும் உறுப்பினராக இல்லாமல் இருப்பவர்

நிற்கக்கூடாத தகுதியற்றவர்கள் வருமாறு:

(1) எந்த வாரியத்திலேனும் கணக்குக் காட்டாதார்.

(2) ஐம்பெருங் குற்றம் செய்தோர்.

(3) ஊர்க் குற்றப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டோர்.

(4) பிறர் பொருளைக் கவர்ந்தோர்.

(5) கள்ளக் கையெழுத்து இட்டோர்.

(6) குற்றங் காரணமாகக் கழுதை மீது ஏற்றப்பட்டோர்.

(7) கையூட்டு (லஞ்சம்)க் கொண்டோர்.

(8) ஊர்க் கண்டகர்.

(9) முறைகெட்ட மணம் புரிந்தோர்.

(10) எதையும் செய்யுந் துணிச்சலுள்ளோர்.

(11) உண்ணத் தகாததை உண்டோர்.

(12) இப்பதினொரு சாராரின் கிய உறவினர்.

(13) கீழ் மக்களோடு கூடியுறைந்து கழுவாய் செய்யாதோர்.

விதிகள் படிக்கப்பட்டு முடிந்தவுடன் தேர்தல் நடைபெறும். கூட்டத்தின் நடுவில் இரண்டு பெரிய வெற்றுக்குடங்கள் வைக்கப்பட்டிருக்கும். தகுதியாளர் பெயர்களைக் குடவோலையாளர் (வாக்காளர்) எழுதி தரும் ஓலைகளைக் குடும்பு வாரியாக கட்டி ஒரு குடத்தில்வைப்பார். கூட்டத்திலுள்ள முதியவர் ஒருவர் முதலில் குடம் வெற்றுக்குடந்தான் என்பதைத்தெரிவிக்கக் குடத்தை எடுத்துக் கூட்டத்திற்குக் காட்டுவார். பிறகு ஒவ்வொரு குடும்பு வாரியான கட்டை எடுத்து, அவிழ்த்து மற்றொரு குடத்திலிட்டு, அந்தக் குடத்தை அந்த முதியவர் குலுக்குவார். பின்னர் நன்மை தீமை அறியாத சிறுவன் ஒருவன் அழைக்கப்பட்டுக் குடத்திலுள்ள ஒரு ஓலையை எடுக்கும்படி சொல்லப்படுவான். எடுத்த அந்த ஓலையைத் தேர்தல் அதிகாரி தன் வலக்கை விரல் ஐந்தையும் விரித்துக்காட்டி, அந்தக் கையால் ஓலையை வாங்கி, அதில் வரையப்பட்டிருக்கும் பெயரை அனைவர்க்கும் கேட்கும்படி படித்டிக் காட்டுவார். பிறகு அந்த ஓலையை முதியவர் பலரும் வாங்கிப் பார்ப்பர்

ஒரு ஊரில் முப்பது குடும்புகளிலிருந்தால் மேற்கூறியவாறு முப்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவருள் ஆட்டை வாரியம் என்னும் ஊர் வாரியத்திற்கு பன்னிரண்டு பேர்களும், தோட்ட வாரியத்திற்குப் பன்னிரண்டு பேர்களும், ஏரி வாரியத்திற்கு ஆறு பேர்களும் பகுக்கப்படுவர். பொன் வாரியம், பஞ்ச வாரியம் போன்ற பிற வாரியங்கள் அந்த ஊரிலிருந்தால், அவற்றிற்குரிய உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுப் பகுக்கப்படுவர்.

புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் செவ்வனே தம் கடமையைச் செய்யவேண்டும், கடமை தவறியவரும், குற்றஞ் செய்தவரும் குற்றப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுவர்.

தேர்தல் விதிமுறைகள் அவ்வப்போது தேவைக்கேற்றபடி அரசனால் திருத்தப்பெறும். அக்காலத்துத் தேர்தல்முறை குடவோலை முறையும், திருவுளச் சீட்டு முறையும் கலந்த ஒன்றாகும்.

பண்டைத் தமிழகத்தின் ஊர்மன்றத் தேர்தல்!

நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எம். எல். ஏ.

முடியுடை மூவேந்தர்கள் ஆண்ட பண்டைத் தமிழகத்தில் மூன்று பகுதிகளாகப் பிரிந்திருந்த சேர—சோழ—பாண்டிய நாடுகளை ஆளத் தனித்தனி அரசவை இருந்ததைப் போலவே, ஒவ்வொரு ஊரையும் ஆளத் தனித்தனி ஊர் மன்றம் இருந்துவந்தது.

தமிழகத்தில் இருந்து வந்த ஊர் மன்றங்கள் மிகப் பழம் பெருங் காலந்தொட்டே சீராகவும் சிறப்பாகவும் தகுதியோடும் திறமையோடும், அறிவும் ஆற்றலும் மிளிர நடைபெற்று வந்திருக்கின்றன. ஊர்தோறும் அமைந்திருந்த ஊர் மன்றம் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிலிருந்தும், கல் வெட்டுக்களிலிருந்தும் செப்பேடுகளிலிருந்தும் சிறு சிறு குறிப்புக்களாகத் தெரிய வருகின்றன. தமிழகம் போற்றி வளர்த்து வந்த ஊர் மன்ற அமைப்பு முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து வெள்ளையர் ஆட்சி தொடங்கிய சில காலம் வரையிலும் செம்மையாக அதே போக்கில் இருந்து வந்தது என்று கூறலாம்.

ஒவ்வோர் ஊரிலும் ஆண்டு தோறும் ஊரை ஆளும் ஊர்மன்றங்களின் தேர்தல் நடைபெற்றது. ஒவ்வோர் ஊர் மன்றத்தின் ஊழிய ஆண்டு முடிவுறும்போது அதனைக் கண்காணித்து வரும் அதிகாரிக்கோ அல்லது அரசனால் மதிக்கப்பட்ட ஒரு பெரியவருக்காவது அரசனிடமிருந்து தேர்தல் விதிகளடங்கிய ஆணைச் சீட்டு வரும். அந்த ஆணையின் அடிப்படையில் அவர்கள் ஊர் மன்றத் தேர்தலை நடத்தி வைப்பார்கள்.

அரசனிடமிருந்து வந்த ஆணையை, ஆணை பெற்ற அதிகாரி ஊர்ப் பெருமக்களைக் கூட்டி வைத்து அறிவிப்பார். அவர் அந்த ஆணை எழுதப்பெற்ற ஓலைச் சீட்டைத் தலைமேல் வைத்துப் பிறகு கண்ணில் ஒற்றிக் கொண்டு, பின்னர் அதனை ஊர் மக்களுக்குப் படித்துக் காட்டுவார்.

ஒவ்வோர் ஊரும் பல குடும்புகளாகப் (வார்டுகள்) பிரிக்கப்பட்டிருந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உத்தரமேரூர் முப்பது குடும்புகளையும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த செந்தலை என வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம் அறுபது குடும்புகளையும் கொண்டிருந்தன.

தேர்தல் அதிகாரி, தேர்தல் நடைபெறும் நாளன்று ஊர் மக்கள் அனைவரையும், சிறுவர் உட்பட, ஊர்ப் பொதுச் சாவடியிலாவது, கோயில் மண்டபத்திலாவது, மரங்கடைந்த தோப்பிலாவது, ஆலமரத்தடியிலாவது கூட்டுவார். புதிய ஊர் மன்றத்தில் உறுப்பினராயிருந்து வாரியம் செய்வதற்கு ஒவ்வோர் குடும்பிலிருந்தும் ஒருவரோ அல்லது பலரோ ஊருக்குத் தகுந்தாற்போல் தேர்ந்தெடுக்கப்படுவர். உறுப்பினர்கள் குடவோலை மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்தல் தொடங்குமுன் அரசன் ஆணைச் சீட்டிலுள்ள தேர்தல் விதிகள் அனைவர்க்கும் படித்துக் காட்டப் பெறும். அந்த ஆணையில் தேர்தல் நடைபெற வேண்டிய முறைகள் பற்றியும், தேர்தலுக்கு நிற்கக்கூடிய தகுதி படைத்தவர்கள் யார் யார் என்பது பற்றியும் தேர்தலுக்கு நிற்கத் தகுதியற்றவர்கள் யார்யார் என்பது பற்றியும், பொறுப்பு ஏற்க வேண்டிய வாரியங்கள் (குழுக்கள்) வகைகள் பற்றியும், தகாத முறையில் நடந்து கொள்வோர்க்குத் தரப்பட வேண்டிய தண்டனைகள் பற்றியும் கூறப்பட்டிருக்கும்.

தேர்தல் விதிமுறைகள் எப்படியிருந்தன என்ற விபரமெல்லாம் செப்பேடுகளிலிருந்தும், கல்வெட்டுக்களிலிருந்தும் தெரிய வருகின்றன.

தேர்தலுக்கு நிற்கக் கூடியவர்களின் தகுதிகள் வருமாறு;

(1) காணிக்கடன் செலுத்தும் நிலம் கால், வேலிக்குக் குறையாமல் உடையவர்.

(2) சொந்த மனையிற் கட்டிய

(23-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1